வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 11.10.2021 திங்கட்கிழமை | இதழ் : 310 | பக்கங்கள் : 16

### நல்லூர் கந்தசுவாமி ஆலய நிர்வாகி

# குமாரதாஸ் மாப்பாணரின் பூதவுடல் தீயுடன் சங்கமம்!

*நல்லூர், ஒக். 11*

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் நிர்வாகி இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமமானது.

நேற்றுமுன்தினம் சிவபதமடைந்த இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் பூதவுடல் நல்லூரிலுள்ள அவரின் இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதன்போது அவருடைய உடலுக்கு பொதுமக்கள், அரசியல் தலை

15



# லிட்ரோ எரிவாயுவின் விலை 1,257 ரூபாயால் அதிகரித்தது!

*கொழும்பு, ஒக். 11*

நேற்று நள்ளிரவுமுதல் நடைமுறைக்கு வரும்வகையில் லிட்ரோ எரிவாயுவின் விலையை 2,757 ரூபாயால் அதிகரித்துள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் புதிய அறிவிப்பின்படி 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 2,750 ரூபாயாகும். இதன் முன்னைய விலை 1493 ரூபாயாகும். இதன்படி, 1,257 ரூபாய் அதிகரித்துள்ளது.

இதேபோன்று 5 கிலோ எரிவாயுவின் விலை ரூ. 598 ரூபாயிலிருந்து 503 ரூபாய் அதிகரித்து 1,101ரூபாயாகவும், 2.5 கிலோ எரிவாயு ரூ. 289இலிருந்து

15



# புதிய அரசமைப்பு ஊடாக புதிய தேர்தல் முறைமை!

### ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு



**கொழும்பு, ஒக்ரோபர் 11**

**மக்களுக்கு வாக்குறுதி அளித்தபடி நாட்டில், புதிய அரசமைப்பை ஏற்படுத்தி புதிய தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

15

# அரசியல் கைதி ஒருவர் விடுதலை

### 12 வருடங்களின் பின் நிரபராதி என தீர்ப்பு

*கொழும்பு, ஒக். 11*

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 12 வருடங்களாகச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று மொனராகலை நீதிவான் நீதிமன்றத்தால் நிரபராதி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று, சின்னப்பனங்காட்டை சேர்ந்த கதிரவேலு கபிலன் (வயது 29) என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவ

15

# கொரோனா தொற்றால் மேலும் 35 பேர் மரணம்!

*கொழும்பு, ஒக். 11*

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 35 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயி

15

# வாய்க்காலில் தவறி வீழ்ந்து சிறுவன் பலி!

*யாழ்ப்பாணம், ஒக். 11*

குளத்தின் வாய்க்காலில் தவறிவீழ்ந்த 6 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று சங்கானை தேவாலய வீதியில் இடம்பெற்றது. இதில், 6 வயதேயான நிரோஜன் ஸ்ரீபன் என்ற சிறுவனே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மதியத்திலிருந்து சிறுவனைக் காணவில்லை என உறவினர்கள் தெரிவித்ததையடுத்து அயலவர்கள் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர். இதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில்

15



# முதல்பெண் மாவீரர் மாலதி நினைவுதினம் அனுஷ்டிப்பு!

*கிளிநொச்சி, ஒக். 11*

தமிழர் விடுதலை போராட்டத்தில் வித்தான தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரர் மாலதியின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டது.

மாவீரர் மாலதியின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி, ஈகைச்சுடர் ஏற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அஞ்சலி செலுத்தினார்.

நினைவேந்தலை

15

# பருத்தித்துறையில் பெரும் குழு மோதல்!

*வடமராட்சி, ஒக். 11*

பருத்தித்துறை கற்கோவளம் - புனிதநகர் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற பெரும் குழு மோதலில் ஐந்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன என்று அங்கிருந்து கிடைத்த முதல் கட்ட தகவல்கள் தெரிவித்தன.

வன்முறையை கட்டுப்

15



## இப்படியும் நடக்கிறது...!

மகாபாரதப் போர் நடந்து கொண்டிருந்தது. ஒரு வீரன் போர்க் களத்திற்குள் வந்து கொண்டிருந்ததை கிருஷ்ணர் கவனித்தார். அவனுடைய நேர் பார்வையும், நிமிர்த்திய நெஞ்சும், வீர நடையும் கிருஷ்ணரை ஈர்த்தது. தன் உருவை மாற்றிக் கொண்டு அவனை அணுகி "வீரனே எங்கு வந்தாய்?" என்று கேட்டார்.

"நான் போரில் பங்கேற்க வந்தேன்!", என்றான் அவன்.

"உனக்கு என்னப்பா தகுதியிருக்கிறது" என்றார் கிருஷ்ணர்.

அவன் தன்னிடம் இருக்கும் வில்லையும் மூன்று அம்புகளையும் காட்டி, "இதில் ஒன்றால் பாண்டவர்களையும், மற்றொன்றால் கௌரவர்களையும், மூன்றாவதால் அந்தக் கிருஷ்ணனையும் கொல்லும் திறமை படைத்தவன் நான்" என்றான்.

"எப்படி உன்னை நம்புவது?" என்றார் கிருஷ்ணர். அவன் அவரை மேலும் கீழும் பார்த்து விட்டு தூரத்தில் உள்ள மரத்தைக் காட்டி, அதில் இருக்கும் இலைகள் அனைத்தையும் ஒரே அம்பில் வீழ்த்திக் காட்டுவதாகக் கூறினான்.

விளையாடிப் பார்த்து விடுவது என்று முடிவு செய்த கிருஷ்ணர், "சரி செய் பார்க்கலாம்" என்றார். அவர் கடவுளல்லவா? அவனுக்குத் தெரியாமல் மரத்தின் ஐந்து இலைகளை முதலில் தன் காலடியின் கீழே மறைத்துக் கொண்டார்.

வீரன் நாண் ஏற்றி அம்பை எய்தான். அவன் சொன்னது போலவே மரத்தில் அனைத்து இலைகளும் ஒரே அம்பின் தாக்குதலில் கீழே விழுந்து விட்டன. அதோடில்லாமல் அம்பு திரும்பவும் வந்து ஐந்து முறை கிருஷ்ணரின் காலைத் துளைத்தது.

வீரன் கிருஷ்ணரைத் தெரிந்து கொண்டு வணங்கினான்.

கிருஷ்ணரும் அவனின் திறமையைப் பாராட்டினார், "சரி, யாருக்காக போராடப் போவதாக உத்தேசம்?" என்று கிருஷ்ணர் கேட்டார். வீரன் "என் திறமைக்கு சவாலாக நான் எப்போதுமே தோற்கும் கட்சிக்கு ஆதரவாகவே போரிடுவேன்", என்றான்.

"இவன் போரிட்டால் இவன் பக்கம் உள்ள கட்சி ஜெயிக்க ஆரம்பிக்கும், உடனே இவன் எதிர் கட்சிக்குப் போய் விடுவான். பிறகு அது ஜெயிக்க ஆரம்பிக்கும். இது முடியவே முடியாதே. போருக்கு ஒரு முடிவு ஏற்படாமல் போய் விடுமே" என்று கிருஷ்ணர் யோசித்தார்.

பின்னர் அந்த வீரனுக்கு நடந்தது இப்போது தேவையில்லாதது என்பதால் அதனை விட்டுவிடுவோம்.

எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னதாக மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பு நமது தலைவர்களையும் நித்திரையிலிருந்து எழுப்பி விட்டிருக்கின்றது.

எதிர்வரும் பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு முன்னால் மாகாண சபைகளின் தேர்தலையாவது அரசாங்கம் நடாத்தும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று தனது தீர்மானத்தில் வலியுறுத்தியுள்ள மனிதஉரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தில், நாங்கள் தீர்மானத்திலுள்ள சில விடயங்களையாவது செய்யத் தொடங்கியிருக்கிறோம் என்று காட்டவேண்டிய நிலையில் அரசு இருக்கின்றது.

அது வேறு விடயம். ஆனால், தேர்தல் குறித்து பஸில் அறிவித்ததும் நமது தலைவர் சிவஞானம் சிறிதரன் அவர்கள் கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளர் மாவை சேனாதிராசாதான் என்று தீர்ப்புக் கூறிவிட்டார்.

அவர் இப்படி அறிவிப்பு விடுத்ததும் மேலேயுள்ள கதையில் வரும் வீரனின் நினைவுதான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.

அரசியலில் யார் ஒருவர் தோல்வி முகத்தில் இருக்கிறாரோ அவருடன் சேர்ந்துகொண்டு அவரை வெல்ல வைக்க இந்த மனுசன் தானாக முன்வந்துவிடுகிறாரே என்று நினைக்கத் தோன்றியது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில், நான் தோற்றாலும் பரவாயில்லை, சுமந்திரன் வெல்லவேண்டும் என்று சபதமெடுத்தவர் இந்த சிறிதரன். அதனால் அவரும் பல ஆயிரம் வாக்குகளை இழந்தது வேறுகதை.

ஆனால், தனது ஆதரவை வழங்கி அவரை 'வெல்ல வைத்தது' தெரிந்த கதைதானே.


இப்போது இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு நடந்த தேர்தலில் மாவைக்கு புலிகள் உதவியதை நினைவில் வைத்துக்கொண்டோ தெரியவில்லை. இப்போது மாவைக்கு உதவ தயாராகியிருக்கிறார் சிறிதரன்.

தன்னையும் எப்படியும் வெல்ல வைத்துவிடுவார் என்ற நம்பிக்கை மாவையருக்கு இப்போது ஏற்பட்டிருக்கலாம்.!

**- ஊர்க்குருவி**

# அரசன் முதல் ஆண்டிவரை சமநிலையினர் என நிலைநிறுத்தியவர் குமரதாஸ் மாப்பாணர்

## விக்னேஸ்வரன் எம். பி. இரங்கல்



யாழ்ப்பாணம், ஒக். 11

மாப்பாண முதலியார் அரசன் முதல் கடைநிலை ஆண்டிவரை சமநிலை உடையவர்கள் என்பதை இறுதிவரை நிலைநிறுத்தினார் என்று யாழ். மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் ஆலயத்தின் மறைந்த நிர்வாகி இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் மறைவு குறித்து அவர் நேற்று விடுத்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

மறைந்த இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் மறைவு எம்மை ஆறா துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக கிட்டத் தட்ட 57 வருடங்களாக நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தை எந்தவித குறைவுமின்றி அதன் நிர்வா கத்தை திறம்பட முன்னெடுத்துச் சென்றமை அவரின் நிர்வாகத் திறனை படம் போட்டு காட்டு கின்றது. அவரின் நிர்வாகத்திற மைக்கு அவரின் இயல்பான நிர்வாக திறமையுடன் இணைந்து அவரின் அடிப்படை கல்வி அறிவு மற்றும் மொழித்திறன் என்பன பக்கபலமாக அமைந்திருந்தன. அவரின் பாரியார் அவருக்குஉற்றதுணையாக இருந்தார். அவரின் நிர்வாகத் திறன் அனைவராலும் பாராட்டப்பட்டதொன்று.

ஆலயத்தில் அடியவர்களுடன் தானும் ஓர் அடியவனாக எளிமைத் தோற்றத்தில் காட்சியளித்த அவரின் கண்கள் ஆலயத்தில் நடைபெற்ற அனைத்து விடயங்களையும் ஊன்றி அவதானித்து சீர் செய்யத் தவறியதில்லை. ஆலயத்தினுள் அரசன் தொடக்கம் கடைநிலைஆண்டி வரை சமநிலை உடையவர்கள் என்பதை இறுதி வரை நிலை நிறுத்தியவர். எந்தவொரு பிரமுகரின் வருகைக்காகவோ வேறு எந்தக் காரணங்களுக்காகவோ ஆலயத்தின் பூஜை வழிபாட்டு நேரங்களில் மாற்றம் விளைவிக்க அவர் அனுமதித்ததில்லை. அன்னாரின் பிரிவால் கலங்கி நிற்கும் அடியவர்களை ஆற்றுப்படுத்தும் தூய பணியில் இளைய எஜமானார் ஆலய நிர்வாகத்தை பொறுப்பேற்று தந்தையின் வழியில் சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்றார். அவருக்குத் தேவையான சக்தியையும் மன பலத்தையும் முருகப் பெருமான் அருளவேண்டுமென இறைஞ்சுகிறேன் - என்றுள்ளது. (ஐ)

## யாழில் தொற்றால் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

கொரோனா தொற்றால் யாழ்ப்பாணத்தில் நேற்று ஒருவர் உயிரிழந்தார்.

மானிப்பாயை சேர்ந்த 85 வயதான சின்னத்துரை பரிமளம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவரின் உடலில் பெறப்பட்ட மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஊடாக ஆய்வகத்தில் பி. சி. ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

### கல்வி TV CHANNEL-1
**11.10.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி TV CHANNEL - 2
**11.10.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
11.10.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மகாண சபை தேர்தலுக்கு முன்னர்?

மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை 'ஈழநாடு' வலியுறுத்தியிருந்தது. எமது ஆசிரியர் தலையங்கங்கள் வெளியாகியிருந்த சம காலத்தில், மாகாண சபை தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச் மாதமளவில் நடத்தப் போவதாக நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். இதனைத் தொடர்ந்து தேர்தல் தொடர்பான ஆர்வம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. மாகாண சபை தேர்தல் தொடர்பான செய்தி வெளியான உடனேயே, வடக்கு மாகாண சபைக்கான கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்னும் கேள்வியும் எழத் தொடங்கிவிட்டது. இதிலிருந்து ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, மாகாண சபை தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டால் தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் மீண்டும் ஒரு தெருச்சண்டை ஏற்படலாம்.

ஆளுக்கொருவர் ஒவ்வொரு பெயர்களுடன் முட்டி மோதக்கூடும். அவ்வாறு மோதல்கள் ஏற்பட்டால், அரசதரப்பு தமிழ் கட்சிகளின் கைதான் உயரும். இன்றைய சூழலில் தமிழ் மக்கள் தனித்துவமாக ஆட்சிசெய்யக் கூடிய ஒரேயோர் இடம் வடக்கு மாகாணம் மட்டும்தான். இந்த விடயத்திலும் நமது தலைவர்கள் என்போர் தூரநோக்கின்றி, தெருச் சண்டைகளில் ஈடுபடுவார்களாயின், வடக்கு மாகாண சபையையும் பறிகொடுக்க நேரிடலாம். இது தொடர்பில் எமது தலைவர்கள் என்போர் இப்போதிருந்தே சிந்தித்து செயல்படுவது கட்டாயமான ஒன்று. இதன்மூலம் இறுதி நேர தெருச்சண்டைகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

இந்திய வெளியுறவு செயலர் மாகாண சபை தேர்தல் தொடர்பில் கரிசனை வெளிப்படுத்தியிருக்கும் நிலையில்தான், பஸில் ராஜபக்ஷவின் அறிவிப்பும் வெளியாகியிருக்கின்றது. ஆனால், அரசாங்கத்தை பொறுத்தவரையில், மிகவும் குறுகிய காலத்தில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்றதா? தேர்தலுக்கு நாங்கள் தயார் என்று கூறிக்கொண்டாலும்கூட, நடைமுறையில் அது இலகுவான ஒன்றா? ஏனெனில், ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுப்பேற்ற காலத்தில் இருந்தது போன்ற சாதகமான சூழல் இப்போது இல்லை. பெருந்தொற்று நாட்டின் பொருளாதாரத்தை மட்டும் சிதைக்கவில்லை கூடவே, ராஜபக்ஷக்களின் செல்வாக்கையும் வீழ்த்தியிருக்கின்றது. எதிரணிகள் பலமாக இல்லாத நிலைமை, அரசாங்கத்திற்கு ஓரளவு சாதகமாக இருந்தாலும்கூட, தேர்தல் ஒன்றை எதிர்கொண்டால் முன்னர் இருந்த ராஜபக்ஷ அலை இருக்குமே என்பது சந்தேகமே! அரசாங்கத்தின் செல்வாக்கு தொடர்பில் அவதானிகள் இதனை பொதுவாக சுட்டிக்காட்டுகின்றனர். நிலைமைகளை அவதானிக்கும்போது அவ்வாறானதொரு தோற்றம்தான் தெரிகின்றது.

எனவே இந்த நிலையில், தேர்தல் வெற்றிக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளாமல், ராஜபக்ஷக்கள் மாகாண சபை தேர்தலை சடுதியாக எதிர்கொள்வார்களா? தேர்தலை வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பது உண்மைதான். இந்தியா மட்டுமல்ல, இலங்கையின்மீது அவதானம் செலுத்திவரும் சர்வதேச சமூகமும் மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்தவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கின்றது. அவர்களைப் பொறுத்தவரையில் மாகாண சபை தேர்தலை நடத்தி, மாகாண நிர்வாகத்தை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கான சூழல் என்பது, இலங்கையின் நல்லாட்சியுடன் தொடர்புபட்டவை.

இந்த பின்புலத்தில் மாகாண சபை தேர்தலை வேறு காரணங்களைக்கூறி பிற்போட முடியாத நிலைமை காணப்படுகின்றது. ஆனாலும் தேர்தலுக்கு சென்றால் அதில், பெருபான்மை வெற்றியை காண்பிக்க வேண்டிய தேவை ராஜபக்ஷக்களுக்கு உண்டு. தேர்தலில் வெற்றியை காண்பிக்காது போனால் அல்லது, ஒரு தொங்கு நிலையில் மாகாண சபைகள் அமையுமாயின், அது 2024, வெற்றிக் கனவை இல்லாமலாக்கிவிடும். இதனை கருத்தில் கொண்டுதான் ராஜபக்ஷக்கள் முடிவுகளை எடுப்பார்கள். இந்த அடிப்படையில், மாகாண சபை தேர்தல் தொடர்பில் பஸில் கூறினாலும்கூட, சூழல் தங்களுக்கு சாதகமாக இருந்தால் மட்டும்தான், அவர்கள் தேர்தலுக்கு செல்வார்கள். சூழல் அவர்களுக்கு சாதகமாக இல்லையென்றால், மாகாண சபை தேர்தல் மேலும் தள்ளிப் போகலாம். ஆனால், தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிடுவார்கள். ஏனெனில், மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டுமென்பது, வெறுமனே உள்நாட்டு விவகாரம் மட்டுமல்ல. சூழல் அவர்களுக்கு சாதகமாக இருப்பதாக, அவர்கள் நம்புவார்களாயின், தேர்தல் விரைவாக நடக்கலாம்.

# கவனத்தில் கொள்ள வேண்டிய கலாநிதி தயான் ஜயதிலகவின் ஆலோசனை!

அலசுவது
இராஜதந்திரி

இலங்கையின் பிரபல அரசியல் ஆய்வாளரும் 1987ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையில் அன்றைய முதலமைச்சர் வரதராஜபெருமாளின் அமைச்சரவையில் அங்கம் பெற்றவருமான கலாநிதி தயான் ஜயதிலக 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவது தொடர்பாக வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்புகளுக்கு ஆலோசனை ஒன்றை வழங்கியுள்ளார்.

ஆழமாக சிந்திக்க வைப்பதாகவும் தமிழ் அரசியல் தரப்பின் ஒற்றுமையை வலியுறுத்துவதாகவும் தயான் ஜயதிலக தெரிவித்துள்ள ஆலோசனை விளங்குகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவது தொடர்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கமே இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான காலம் முதல் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், 13ஆவது திருத்தச் சட்டமே வடக்கு - கிழக்கில் அதிகாரப் பரவலாக்கத்துக்கு நல்லதோர் ஆரம்பமாக இருக்க முடியும் என்பதை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இருந்தபோதிலும் அதன் முழுமையான அமுலாக்கம் தொடர்பிலேயே தாமதங்களும், இடையூறுகளும் நிலவுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு அமைவாக இலங்கையின் அரசியல் அமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் சேர்த்துக் கொள்ளப்பட்டபோது, தென்னிலங்கையில் கடுமையான எதிர்ப்பு இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு ஏற்பட்டிருந்தது.

பௌத்த பிக்குமார்கள் மட்டுமல்ல. பிக்குமார்களைப்போல காவி தரித்த பேரினவாத கேடிகளும் கொழும்பு வீதிகளில் இறங்கி இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கும், 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் எதிராகப் போரட்டங்களை நடத்தியிருந்தனர்.

அச்சமயம் கொழும்பின் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த பருமனான உடலமைப்பைக் கொண்டிருந்த பிரதிப்பொலிஸ் மா அதிபரான கபூர் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பணிப்புரைக்கமைய கட்டுமீறிய குழப்பக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு உத்தரவிட்டார். அப்போது, பொலிஸ் துப்பாக்கி பிரயோகத்தில் கொல்லப்பட்டவர்களில் சிலரே பிக்குமாரின் காவி உடையில் வந்திருந்த காடையர்கள் என்பது தெரியவந்திருந்தது.

இதேவேளை, வடக்கு-கிழக்கில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் கூடிய 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்திய அமைதிப்படையினர்மீது போர் தொடுத்திருந்தனர்.

இருந்தபோதிலும் இந்தியாவினதும் இலங்கையினதும் பக்கபலத்தோடு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரதராஜபெருமாளை முதலமைச்சராக கொண்டு அமைக்கப்பட்ட இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் தென்னிலங்கையரின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஓர் உறுப்பினராக இருந்தவரே கலாநிதி தயான் ஜயதிலக.

தயான் ஜயதிலக வடக்கு - கிழக்கு மாகாண சபையில் அங்கம் வகித்தமையை முற்போக்கான தென்னிலங்கையர்களின் வெளிப்பாடு எனவும் விமர்சிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, தயான் ஜயதிலக வடக்கு - கிழக்கு மாகாண சபையில் அங்கம் வகித்ததை பற்றி விமர்சித்தவர்கள் அவரை அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் முகவர் என்றுகூட தெரிவித்திருந்தனர்.

காலப்போக்கில் வடக்கு - கிழக்கு ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்தபோது தயான் ஜயதிலக தமது அரசியல் ஆய்வுக்கட்டுரைகளில் ஆயுதப் போராட்டத்தை விமர்சித்திருந்தார். இதன்பின்னர் தென்னிலங்கை ஆட்சியாளர்களின் நம்பிக்கைக்குரியவரான நிலையில் சில நாடுகளுக்கு இலங்கைத் தூதுவராகவும் அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும், 13ஆவது திருத்தச் சட்டத்துடனான இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அன்றைய அமைச்சரான தயான் ஜயதிலக தமிழ் அரசியல் கட்சிகளிடம் விடுத்துள்ள வேண்டுகோள் அர்த்தமுள்ளதாகவே இருக்கின்றது.

ஐந்துக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளும், தேசிய கட்சிகளும் வடக்கு - கிழக்கு அரசியலில் பங்கேற்றுள்ளன. இந்தக் கட்சிகள் தம்மிடையேயான அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக வேறுபாடுகளைக் கொண்டிருக்கலாம். ஆனால், 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம் தொடர்பாக அனைத்து வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. அரசாங்கத்தில் பங்காளிக்கட்சியாக இருக்கின்ற ஈழமக்கள் ஜனநாயக கட்சித் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் அண்மையில் 13ஆவது திருத்தச்சட்டம் முற்று முழுதாக அமுலாக்கவேண்டுமென வலியுறுத்தியிருந்தார். அத்துடன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாககம் மூலமாகவே வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளை நிரந்தரமாக நிறைவேற்ற முடியுமெனவும் தெரிவித்திருந்தார்.

13ஆவது திருத்தச்சட்டம் என்பது வடக்கு - கிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்கின்ற அதேசமயம், அதன்மூலம் இந்தியாவின் நல்லெண்ணத்தையும் பெற முடியும் என்பதையும் தயான் ஜயதிலக சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவும் 13ஆவது திருத்தச்சட்டமே வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வென்பதை குறிப்பிட்டுள்ளது. அத்துடன், சகல தமிழ் அரசியல் கட்சிகளும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கத்தையே வலியுறுத்துகின்ற நிலையில் கலாநிதி தயான் ஜயதிலக குறிப்பிட்டதுபோல தமிழ் கட்சிகளிடையே வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால், 13ஆவது திருத்தச்சட்ட கோரிக்கையை பலப்படுத்தும் விதத்தில் தமிழ் கட்சிகளிடையே ஓர் ஐக்கியமான அணியொன்று ஏற்படுத்தப்படுவதே அறிவுபூர்வமான நடவடிக்கையாக இருக்க முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



ஒக்ரோபர் - 11 திங்கட்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 25
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : சஷ்டி




**மேடம்**
முன்யோசனையுடன் நிதானமாக செயல்பட வேண்டிய நாள். பேச்சில் நிதானம் உள்ளோருக்குப் பிரச்னையற்ற நாள். நண்பர்களுக்காக சந்தோஷத்துடன் செலவு செய்ய நேரிடும்.

**இடபம்**
துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய நட்பு கிடைக்கும். தெய்வ வழிபாட்டால் அமைதி காண்பீர்கள். பரபரப்பான நாள். குழந்தைகளின் பணியில் இருந்த சிரமம் ஒன்று தீரும்.

**மிதுனம்**
நீண்ட நாளைய எண்ணம் ஒன்று நிறைவேறி மகிழ்வீர்கள். புதிய பொருள் சேர்க்கை உண்டு. உற்சாகம் கூடும். வராது என நினைத்த பணம் இன்று கிடைக்கலாம்.

**கடகம்**
நட்பு வட்டம் விரிவடையும். கலைத்துறையில் ஆர்வம் கூடும். காத்திருந்த வாய்ப்பு ஒன்று நல்லோர் முயற்சியால் கைகூடும். திருப்தி தரும் நாள். வருங்காலம் பற்றிய திட்டம் உருவாகும்.

**சிம்மம்**
நண்பர்கள் கைகொடுத்து உதவுவதால் முயற்சி வெற்றி தரும். புத்திசாலித்தனத்தால் சாதனை ஒன்றை செய்து முடிப்பீர்கள். உயரதிகாரிகளின் தொடர்பு நன்மை தரும். அதிர்ஷ்டமான நாள்.

**கன்னி**
சொத்து சம்பந்தமாக முக்கியமானவரை சந்திப்பீர்கள். பல நாள் கனவு நனவாவதற்கு உறவினர் உதவ முன்வருவர். குழந்தைகள் நன்மை அடைவார்கள். நிம்மதி கூடும் நாள்.

**துலாம்**
பல நாள் திட்டம் பற்றி யோசித்து முடிவு எடுப்பீர்கள். தாய் வழி உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்திற்கு உதவுவர். பெற்றோர் உடல்நலத்தில் இருந்து வந்த பிரச்னை தீரும்.

**விருச்சிகம்**
சுபநிகழ்ச்சி ஒன்றினைப் பற்றிய திட்டம் நிறைவேறும். குழந்தைகளின் முன்னேற்றம் பற்றிய பயம் நீங்கும். கடிதம் மூலம் நல்ல செய்தி வந்து சேரும் நாள்.

**தனுசு**
நினைத்தது நிறைவேறுவதில் சிறு தாமதம் நேரும். வாகனப் பராமரிப்பில் கவனம் செலுத்துவது நல்லது. பொதுவாழ்வில் சேவை மனப்பான்மை அதிகரிப்பதால் புகழ் கூடும்.

**மகரம்**
நண்பர்களுடன் நெருக்கம் கூடும். கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். நீங்கள் சமீபத்தில் மேற்கொண்ட பயணம் எதிர்பார்த்த நன்மை தரும். உங்களின் தயவால் நண்பர்கள் உயர் நிலை அடைவார்கள்.

**கும்பம்**
பேச்சில் நேர்மை இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். பெரியோர்களை மதித்துப் போற்றி அவர்களின் ஆசியைப் பெறுவீர்கள். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு நற்செய்தி உண்டு.

**மீனம்**
பணியாளர்களுக்கு பாராட்டு கிடைக்கும். வாகனம் வாங்குவீர்கள். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்தி பலன் அடைவீர்கள். உங்களின் பொறுப்பு கூடும். பேச்சில் கவர்ச்சி அதிகரிக்கும்.

# எனது மகன் துரை வைகோ அரசியலுக்கு வருவதை நான் துளியும் விரும்பவில்லை

## *20 திகதி முடிவு எடுக்கப்படும் என்கிறார் வைகோ*



*சென்னை, ஒக். 11*

"எனது மகன் துரை வைகோ அரசியலுக்கு வருவதை நான் துளிகூட விரும்பவில்லை. ஆனாலும் வருகிற 20 ஆம் திகதி சென்னையில் நடைபெற உள்ள மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் அவர் அரசியலுக்கு வருவது குறித்து முடிவு எடுக்கப்படும்" என ம.தி.மு.க. தலைவர் வைகோ அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் வைகோ தனது சொந்த ஊரான கலிங்கப்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் நீண்ட வரிசையில் நின்று தனது வாக்கை பதிவு செய்தார். தொடர்ந்து அவரது மகன் துரை வைகோ, சகோதரர் வை.ரவிச்சந்திரன் மற்றும் குடும்பத்தினர் வாக்களித்தனர்.

பின்னர் வைகோ நிருபர்களிடம் கூறியதாவது:

"எனது சொந்த ஊரான கலிங்கப்பட்டியில் அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்று உள்ளது. எந்த வருடமும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு ஒற்றுமையுடன் எங்கள் ஊரில் தேர்தல் நடைபெற்றது. அதற்கு காரணம் எனது மகன் துரை வைகோதான். அவர் அனைத்து மக்களையும் அரவணைத்து ஒற்றுமையுடன் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்துள்ளார்.

ஆனால், அவர் அரசியலுக்கு வருவதை நான் துளிக்கூட விரும்பவில்லை. ஏனெனில் நான் 56 ஆண்டுகள் பல லட்சம் கிலோமீற்றர் விமானம், வாகனங்களிலும், பல ஆயிரம் கிலோமீற்றர்கள் நடைப் பயணமாகவும் செலவழித்துள்ளேன். மேலும் ஐந்தரை ஆண்டுகள் சிறைவாசம் மூலம் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து உள்ளேன். அந்த கஷ்டத்தை அவர் அனுபவிக்க வேண்டாம் என நான் நினைக்கிறேன்.

ஆனாலும் வருகிற 20 ஆம் திகதி சென்னையில் நடைபெற உள்ள மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் அவர் அரசியலுக்கு வருவது குறித்து முடிவு எடுக்கப்படும்."

இவ்வாறு வைகோகூறினார்.

# எதிர்காலத்தில் தி.மு.கவுடன் கூட்டணி குறித்து காலம்தான் பதில் சொல்லும்

## *விஜய பிரபாகரன்*



*சென்னை, ஒக். 11*

"மக்கள் எங்களை தேர்தல் நேரத்தில் அங்கீகரிக்காததால் தேர்தலில் தோல்வியுற்றோம். ஆனால், எமது கட்சிக்கான வாக்கு சதவீதம் அப்படியே தான் உள்ளது. தி.மு.கவின் கூட்டணி குறித்து காலம்தான் பதில் சொல்லும், தமிழக முதல்வர் ஸ்டாலின் சிறப்பான ஆட்சி செய்கிறார்" என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்தின் மகன் விஜயபிரபாகரன் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் தே.மு.தி.க. சார்பில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் விஜயபிரபாகரன் கலந்துகொண்டு நலத்திட்டங்களை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், தே.மு.தி.க. அதே எழுச்சியோடுதான் செயல்படுகிறது. வெற்றி தோல்வி என்பது வந்து போகும். மீண்டும் தே.மு.தி.கவை தூக்கி நிறுத்துவோம்.

மக்கள் எங்களை தேர்தல் நேரத்தில் அங்கீகரிக்காததால் தேர்தலில் தோல்வியுற்றோம். வாக்கு சதவீதம் அப்படியே தான் உள்ளது. தொண்டர்கள் அப்படியேதான் இருக்கிறார்கள். வருங்காலத்தில் தே.மு.தி.க. ஆரம்பித்ததன் இலட்சியம் நோக்கி பயணிப்போம்.

தி.மு.கவுடனான கூட்டணி குறித்து காலம் தான் பதில் சொல்லும். தமிழக முதல்வர் ஸ்டாலின் நல்ல திட்டங்களை கொண்டு வந்து சிறப்பான ஆட்சி செய்கிறார். தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்தின் உடல் நிலை நலமாக உள்ளது. பழைய நிலைக்கு திரும்ப இன்னும் கொஞ்ச நாள் ஆகும். எங்களால் முடிந்த முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். மக்களை சந்திக்க வேண்டிய நேரத்தில் விஜயகாந்த் சந்திப்பார்" என விஜய பிரபாகரன் தெரிவித்தார்.

# மத்திய அரசின் திட்டங்களை கண்காணிக்க முதல்வர் ஸ்டாலின் தலைமையில் குழு

## *நான்கு அ.தி.மு.கவினரும் உறுப்பினர்களாக நியமனம்*




*சென்னை, ஒக். 11*

தமிழகத்தில் மத்திய அரசின் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்க, தமிழக அரசு சார்பில் வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு முதல்வர் மு.க ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். 39 பேர் கொண்ட இக்குழுவில், 4 பேர் அ.தி.மு.கவினர் ஆவர்.

இக்குழுவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழுவின் உறுப்பினர்களாக மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்களான டி.ஆர் பாலு. எஸ்.எஸ் பழனி மாணிக்கம். ஆ.ராசா, எம்.செல்வராஜ், பி,ஆர் நடராஜன், திருநாவுக்கரசர், தொல்.திருமாவளவன், ரவீந்திரநாத் , கே.நவாஸ்கனி ஆகியோரும், மாநிலங்களவை உறுப்பினர்களாக திருச்சி சிவா, ஆர்.எஸ் பாரதி. நவநீத கிருஷ்ணன் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரும், மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் ராஜேந்திரன், எழிலன், நீலமேகம், பூமிநாதன், அசன் மௌலானா மற்றும் செங்கோட்டையன் ஆகியோரும் உள்ளனர்.

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் மாநில அரசால் ஈடுபடுத்தப்பட்டுள்ள மனித வளங்களின் செயல்திறனை வரிசைப்படுத்தி மதிப்பாய்வு செய்தல், வளர்ச்சித் துறை திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள தடைகளை நிவர்த்தி செய்து அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் வடிவமைப்புகளை மேம்படுத்துதல் அல்லது நடுநிலைப்படுத்த உரிய திருத்தங்களை செய்ய பரிந்துரைகளை வழங்குதல் ஆகிய குழுவின் பணியில் அடங்கும்.

# தேர்தல் ஆணைக்குழு பதவியை இராஜிநாமா செய்தார் ஜீவன்!

கொழும்பு, ஒக். 11

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக செயல்பட்டு வரும் ஜீவன் தியாகராஜா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தனது இராஜிநாமா கடிதத்தை கையளித்துள்ளார்.

எனவே, எதிர்வரும் வாரத்திற்குள் வடக்கு மாகாண ஆளுநராக அவர் நியமிக்கப்படலாம் என்று ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவித்தன.

முன்னதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக, ஜனாதிபதியின் செயலாளர் பீ. பி. ஜயசுந்தர தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக செயல்பட்டுக் கொண்டிருந்த ஜீவன் தியாராஜாவை அப்பதவியில் இருந்து இராஜிநாமா செய்யுமாறு கோரும் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார். அதில் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளமை குறித்தும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதையடுத்து ஜீவன் தியாகராஜா அந்தப் பதவியில் இருந்து இராஜிநாமா செய்யும் கடிதத்தை அனுப்பியுள்ளார். அத்துடன், கடந்த வெள்ளிக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இறுதியாகப் பங்கெடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியா விபத்தில் இளைஞர் படுகாயம்!



வவுனியா, ஒக். 11

ஓமந்தை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நெடுங்கேணியில் இருந்து வவுனியா நோக்கி சென்ற முச்சக் கரவண்டி ஓமந்தை பகுதியில் சடுதியாக வீதியின் மறு பக்கமாக திருப்பியுள்ளது.

இதன்போது வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற ஓமந்தை மருதோடையை சேர்ந்த எஸ். கமல்ராஜ் (வயது 30) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை ஓமந்தை பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. (ஐ)

## யாழ். பல்கலைக்கழகத்தில் தடுப்பூசி ஏற்றல் இன்றுமுதல்!

யாழ்ப்பாணம், ஒக். 11

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய, இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கோவிட் 19 தடுப்பூசி ஏற்றல் தேசிய செயல்திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், இன்று முதல் 15ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நெறிப்படுத்தலில், நல்லூர் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினால், இந்தச் செயல்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. தினமும் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை, பல்கலைக்கழக சுகநல நிலையத்தில் தடுப்பூசிகள் ஏற்றப்பட வுள்ளன.

எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களும், பணிபுரிவோரும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்றும், தடுப்பூசி ஏற்ற வரும் போது தேசிய அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகியவற்றைக் கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



கிளிநொச்சி - கண்டாவளையில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் நெல்விதைப்பில் ஈடுபட்டபோது...!

# சகலருக்கும் 6 மாதங்களில் பூஸ்டர் டோஸ் வழங்கப்படும்

## சுகாதார அமைச்சர் கெஹலிய அறிவிப்பு

கொழும்பு, ஒக். 11

**இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டு ஆறு மாதங்களுக்குப் பின்னர் பூஸ்டர் தடுப்பூசி (3ஆவது டோஸ்) வழங்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.**

**நேற்று கண்டியில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், உலக சுகாதார நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்கங்களின் அறிவுத்தலுக்கு அமைய, 2ஆவது தடுப்பூசி செலுத்தப்பட்ட 6 மாதங்களின் பின்னர் பூஸ்டர் செலுத்தப்படும் என்றார்.**

மேலும், 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு பைசர் தடுப்பூசியை பூஸ்டர் டோஸாக வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பூஸ்டர் தடுப்பூசிகளை செலுத்தும் போது முன்கள பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதற்கு தேவையான தடுப்பூசிகள் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ரம்புக்வெல்ல கூறினார்.

ஒரு கோடியே 45 இலட்சம் பைசர் தடுப்பூசிகள் பூஸ்டராக செலுத்தப்படவுள்ளன என்றும், இதற்கான தடுப்பூசிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவை கட்டம் கட்டமாக வந்து சேரும் என்றும் அவர் கூறினார்.

30 வயதுக்கு மேற்பட்ட 1.1 - 1.2 கோடி குடிமக்கள் மற்றும் 20 முதல் 30 வயதுக்குட்பட்ட சுமார் 36 இலட்சம் நபர்கள் தடுப்பூசிக்கு தகுதியுடைய வர்கள் என்று சுகாதார அமைச்சர் கூறினார். (ஐ)



## குருநகர் இளைஞர் கொலை;

# சந்தேகநபர்கள் கைது தாமதம் குறித்து நீதிவான் பொலிஸாருக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஒக். 11

குருநகர் இளைஞன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கான அடையாள அணிவகுப்பை 14 நாட்களுக்கு ஒத்திவைத்த நீதிவான், ஏனையோரை ஏன் இன்னும் கைது செய்யவில்லை, என்ன நடவடிக்கை மேற்கொண்டீர்கள் என பொலிஸாரை கடும் தொனியில் கேள்வி எழுப்பினார். அத்துடன், இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியை மன்றில் விளக்கம் அளிக்கும்படியும் ஏனைய சந்தேகநபர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முற்படுத் தும்படியும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குருநகரில் சமூகவிரோத குழு ஒன்றால் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைதாகினர். பலர் தலைமறைவாகினர். தலைமறைவாக இருந்த 6 பேர் ஈ. பி. டி. பி அமைப்பின் யாழ். மாநகரசபை உறுப்பினரும், சட்டத் தரணியுமான முரெமீடியஸ் ஊடாக, மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் சரணமடைந்தனர்.

இவர்களுக்கான அடையாள அணிவகுப்பு நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் இடம்பெற விருந்தது. இந்த நிலையில் சாட்சிகள் உட்பட சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி என்.சிறீகாந்தா, சட்டத்தரணிகள் மு.றெமிடியஸ், அபிதன், நிசாந்தன் ஆகியோர் முன்னிலையாகினர்.

இதன்போது அடையாள அணிவகுப்புக்கான நபர்கள் போதுமானதாக இல்லாமையால் நேற்றைய அடையாள அணிவகுப்பை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்தி வைத்தார்.

இதன் போது சட்டத்தரணி சிறீகாந்தா சந்தேகநபர்களின் அணிவகுப்பை பகுதி பகுதியாக பிரித்து நடத்துமாறு கோரியிருந்தார். எனினும், அவரின் கோரிக்கையை நிராகரித்த நீதிவான், மற்றைய சந்தேகநபர்களை ஏன் இன்னும் கைது செய்யவில்லை? அதற்காக என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டீர்கள் எனப் பொலிஸாரிடம் கடும் தொனியில் வினவியிருந்தார்.

எனினும், அதற்கு உரிய பதிலளிக்க பொலிஸார் தவறினர். எனவே, யாழ். குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியை மன்றில் தோன்றி பதிலளிக்குமாறு யாழ். நீதிவான் பீற்றர்போல் உத்தரவிட்டார்.

ஏனையோரை துரிதமாக கைது செய்யும்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் உத்தரவு பிறப்பித்தார். (ஐ)

## கோண்டாவிலில் இளைஞர் இரண்டு வாள்களுடன் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 11

கோண்டாவில் பகுதியில் வாள் வெட்டுக்குழுவை சேர்ந்தவர் என சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரின் வீட்டில் இருந்து இரண்டு வாள்களும் கைப்பற்றப்பட்டன என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரின் வீட்டில் வாள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவரின் வீடு நேற்று சோதனையிடப்பட்டது.

இதன்போது மறைத்து வைக்கப்பட்ட இரு வாள்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், 18 வயதான சந்தேகநபரும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ஐ)

## அரியாலையில் வீட்டுக்கு தீ வைத்தனர் மர்மநபர்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 11

அரியாலையில் வீடொன்றை பெற்றோல் ஊற்றி எரிக்க முற்பட்ட மர்ம நபர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் மதில் ஏறி குதித்து வீட்டுக்குள் நுழைந்த மூன்று மர்ம நபர்கள், வீட்டில் பெற்றோல் ஊற்றி தீ மூட்டியுள்ளனர். இதில் வீட்டு சுவர் மட்டும் பாதிக்கப்பட்டுள்ளது. வீட்டுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை.

அந்த மர்ம நபர்களை அடையாளம் காண சி.சி.ரி.வி. கமரா பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் கிளிநொச்சியில் அதிகரிப்பு

## பொலிஸ் திணைக்களம் தகவல்

**கிளிநொச்சி, ஒக். 11**

**கிளிநொச்சியில் கடந்த ஆண்டைவிட இந்தாண்டு அதிகளவான சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஜனவரி தொடக்கம் இந்த மாதம் வரை 20 சிறுவர்கள் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தில், அண்மை நாள்களாக சிறுவர்கள் மீதான, பாலியல் வன்கொடுமைகள், துன்புறுத்தல் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம், இராமநாதபுரம், அக்கராயன், ஜெயபுரம், நாச்சிக்குடா, பூநகரி, பளை, கிளிநொச்சி உள்ளிட்ட 8 பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் சிறுவர் துன்புறுத்தல்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

2020ஆம் ஆண்டில் 07 சிறுவர்கள், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகப்பட்டிருந்தனர். இந்த ஆண்டில் கடந்த ஜனவரி முதல், 20 வரையான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரிய வருகின்றது.

இதனைவிட, சிறுவர்கள் துன்புறுத்துதல், சிறுவர்களுக்கு காயம் விளைவித்தல் போன்ற பல்வேறு முறைப்பாடுகளும் அதிகளவில் பதிவாகி இருக்கின்றன என்றும் அறிய முடிகின்றது. (ஐ)



# இராணுவ தினத்தில் படையினர் கிளிநொச்சியில் இரத்த தானம்!

*கிளிநொச்சி, ஒக். 11*

இராணுவ தினத்தையொட்டி நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் கிளிநொச்சி மருத்துவமனையில் இரத்த தானம் வழங்கினர் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.

கடந்த 8ஆம் திகதி கிளிநொச்சி மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் சுகந்தன் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இரத்த தானம் வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் இராணுவ தினமான நேற்று கிளிநொச்சி மருத்துவமனைக்கு சென்ற நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் குருதிக்கொடை வழங்கினர். (ஐ)

# 6 வர்த்தகர்களுக்கு எதிராக வவுனியாவில் நடவடிக்கை!

*வவுனியா, ஒக். 11*

வவுனியாவில் வங்கிகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன்போது 6 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கு சென்ற சுகாதாரப் பரிசோதகர்களும், பொலிஸாரும் அங்கு சமூக இடைவெளி, சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என சோதனை செய்ததுடன், சுகாதார நடைமுறைகள் மற்றும் இருக்கைகள் தொடர்பில் வங்கி உத்தியோகத்தர்களுக்கு சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தல்களும் இதன் போது வழங்கப்பட்டது.

தொடர்ந்து பசார் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி என்பவற்றில் அமைந்துள்ள நகை கடைகள், உணவகங்கள், புடவைக் கடைகள், பன்சிக் கடைகள், பலசரக்கு கடைகள், வெற்றிலை விற்பனை நிலையங்கள், பேக்கரி, நகை அடைவு பிடிக்கும் கடைகள், தோல் உற்பத்திப் பொருள் விற்பனையகங்கள் என்பன சுகாதாரப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டதுடன், சமூக இடைவெளி பேணாமை மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை சீராக பின்பற்றாமை தொடர்பில் பல வர்த்தக நிலையங்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

மேலும், முககவசம் அணியாது நகை வியாபாரத்தில் ஈடுபட்ட மூவர், பலசரக்கு பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவர், தோல் உற்பத்தி பொருள் விற்பனை செய்த ஒருவர் என ஐந்து பேருக்கும், உணவகத்தில் மக்களை இருக்கைகளில் அமர்த்தி உணவு விற்பனையில் ஈடுபட்ட வர்த்தக நிலைய உரிமையாளருக்கும் என 6 பேருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்ததுடன், அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல செய்யவுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ)

# பளையில் கவிழ்ந்து 'கப்' ரக வாகனம்; மூன்று பேர் காயம்

*கிளிநொச்சி, ஒக். 11*

பளை - ஆனைவிழுந்தான் பகுதியில் கப் ரக வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், வாகனத்தில் பயணித்த மூவர் காயமடைந்தனர்.

கிளிநொச்சி நோக்கி சென்று கொண்டிருந்த கப் ரக வாகனத்துக்கு எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளோட்டியின் தலைக்கவசம் திடீரெனக் கீழே விழுந்தது. இதையடுத்து அவர் சமிக்ஞைகள் ஏதும் இல்லாமல் மோட்டார் சைக்கிளை வீதியின் குறுக்கே நிறுத்தியுள்ளார்.

இதை அவதானித்த வாகன சாரதி வாகனத்தை நிறுத்த முற்பட்ட வேளை அருகில் இருந்த நீர்பம்பியின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் கப் ரக வாகனத்தில் பயணித்த மூவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-2)

# கால்வாயிலிருந்து நேற்று சடலம் மீட்பு!

*கிளிநொச்சி, ஒக். 11*

கிளிநொச்சி - தருமபுரம் -பிரமந்தனாறு பகுதியை சேர்ந்த நபர் ஒருவரின் சடலம் கால்வாயிலிருந்து நேற்று மீட்கப்பட்டது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு வேலை முடித்து தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இராமலிங்கம் புஸ்பராஜ் (வயது 51) எனும் 6 பிள்ளைகளின் தந்தையாவார். இவரை காணவில்லை என்று உறவினர்கள் தேடிவந்த நிலையிலேயே நேற்று நண்பகல் கால்வாயிலிருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்டது. சடலம் பிரேத பரிசோதனை களுக்காக கிளிநொச்சி மருத்து வமனையில் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# கிளிநொச்சி மருத்துவமனைக்குள் புகுந்து காயமடைந்தவர்மீது மீண்டும் வாள்வெட்டு!

*கிளிநொச்சி, ஒக். 11*

வாள்வெட்டில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக காத்திருந்தவர்மீது மூவர் கொண்ட குழு மீண்டும் வாள் வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பியோடியுள்ளது.

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது, முன்னதாக இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் காயமடைந்த நபர் சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

அவரை தேடிச் சென்ற மூவர் குழு, மருத்துவமனையில் காயமடைந்த நபரின் பெயரை பார்வையாளர் பகுதியில் விசாரித்துள்ளது. கடமையிலிருந்த உத்தியோகத்தர், அவர் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு கொண்டுசெல்லப்பட்டமையை தெரிவித்துள்ளார். முதல் மாடியில் அமைந்துள்ள சத்திரசிகிச்சைக்கூடத்துக்கு சென்ற அவர்கள், அங்கு சிகிச்சைக்காக காத்திருந்தவர்மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால், மேலும் காயங்களுக்கு உள்ளான நபர், குருதி வழிந்தோட சத்திர கிசிச்சை கூடத்திற்குள் ஓடியுள்ளார். வெட்டிய நபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று விட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# மக்கள் இறப்பதை பார்க்க விரும்பும் ஒரே எதிர்கட்சி தலைவர் சஜித்தான்!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

*குருநாகல், ஒக். 11*

எதிர்க்கட்சித் தலைவருக்கு நோயொன்று தொற்றியிருக்கிறது. காலையில் மாத்திரை எடுக்காத நாளில் அவர் வயலில் இறங்குவார். பாராளுமன்றத்தில் எழுந்து நிற்பார். அதனால், அது ஒன்றும் புதிதல்ல. இந்த நாட்டில் மக்கள் இறப்பதை பார்க்க ஆசைப்படும் ஓர் எதிர்க் கட்சித் தலைவர் தான் அவர். குடையை இறக்கி வைத்து விட்டு நனைகிறார். மக்களுக்காகத் தான் நனைவதாக காண் பிக்க இவ்வாறு செய்கிறார்கள் என்று நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், விவசாயிகள் உரப் பிரச்னை குறித்து எந்த அவநம்பிக்கையும் கொள்ளத் தேவையில்லை. உர பிரச்னையை தீர்க்கும் திட்டமொன்றை தொடங்கியுள்ளோம். மேலும், விவசாயிகளுக்கு பயிர்செய்கையின்போது நட்டம் ஏற்பட் டால் அரசாங்கம் இழப்பீடு வழங்கும்.

எதிர்க்கட்சியினர் நாட்டில் மாறுபட்ட கருத்தை உருவாக்க முயற்சிக்கின்றனர் . நாடு குறித்து சிந்தித்து சரியான முடிவை நாங்கள் எடுத்துள்ளோம். எனவே, எங்கள் விவசாயிகளுடன் இணைந்து இந்த பிரச்சினையை நிச்சயம் வெற்றி கொள்வோம் - என்றார்.

இதன்போது பால்மா தட்டுப்பாடு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், இவை அனைத்தும் தற்காலிக பிரச்னைகள். பால் மா ஒரு தற்காலிக பிரச்னை மட்டுமே. சிமெந்து ஒரு தற்காலிக பிரச்னை. எரிவாயு ஒரு தற்காலிக பிரச்னை. கோவிட் நெருக்கடியிலிருந்து நாம் சாகாமல் தப்பித்தால் அதுவே போதும். எங்கள் டொலர் கையிருப்பு குறைந்து வருவதை நாங்கள் அறிவோம். பிரச்னைகள் வந்தன. ஆனால், இந்த அரசாங்கம் மக்களை இறக்க இடமளிக்கவில்லை. இவை அனைத்தும் தற்காலிக பிரச்னைகள். விலை கட்டுப்பாடு நீக்கப்பட்டது. அடுத்த சில நாட்களில் பால் மா கிடைக்கும். எரிவாயு வந்துவிடும் என்றார். (ஐ)

# பொருட்களின் விலையேற்றத்தை அரசால் கட்டுப்படுத்த முடியாது!

## இராஜாங்க அமைச்சர் ரோஹித

கொழும்பு, ஒக். 11

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாது. அலாவுதீனின் அற்புத விளக்கு எம்மிடமில்லை. நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என துறைமுகம் மற்றும் கப்பல்துறை அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

களுத்துறையில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமையல் எரிவாயு, கோதுமை மா, பால்மா மற்றும் சிமெந்து ஆகிய பொருட்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. அலாவுதீனின் அற்புத விளக்கு எம்மிடம் இருந்தால் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைக்க முடியும். அதுவுமில்லை. இரண்டு வருட காலம் கோவிட்-19 வைரஸ் தொற்றினால் அனைத்து செயல்பாடுகளும் முடக்கப்பட்டன. 2022ஆம் ஆண்டு முதல் செயல்பட ஆரம்பிக்க வேண்டும்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் ஊடாக ஆசிரியர், அதிபர் சேவையில் நிலவும் வேதன பிரச்னைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். அத்துடன், ஏனைய பிரச்னைகளுக்கும் வரவு - செலவு திட்டத்தின் ஊடாக தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

டொலர் பிரச்னையினால் துறைமுகத்தில் தேங்கியிருந்த அத்தியாவசியப் பொருட்கள் உள்ளடங்கிய கொள்கலன்களை விடுவிக்க முடியாத நிலை காணப்பட்டது. இதன் காரணமாக கடந்த நாட்களில் பால்மாவுக்கு பெரும் தட்டுப்பாடு காணப்பட்டது. தற்போது அனைத்து கொள்கலன்களும் விடுவிக்கப்பட்டுள்ளன. பால்மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இனி தட்டுப்பாடு ஏற்படாது - என்றார். (ஐ)

# கெரவலப்பிட்டி மின்நிலையம் எதுவும் கைச்சாத்தாகவில்லை!

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, ஒக். 11

கெவரலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்கு, அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்காக இதுவரை எந்தவோர் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கெரலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு பங்கை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கெவரலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் பெற்றுக் கொண்டு நாட்டுக்கு பொருத்தமான, ஆரோக்கியமான தீர்மானத்தையே அரசாங்கம் இறுதியில் முன்னெடுக்கும் - என்றார். (ஐ)

# 13ஐ நடைமுறைப்படுத்த தமிழர் தரப்பு ஒன்றுபட்டு செயல்படுவது அவசியம்!

## அரசியல் ஆய்வாளர் தயான் ஜயதிலக



கொழும்பு, ஒக்.11

**இலங்கை, இந்திய ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த தமிழர் தரப்புக்கள் ஐக்கிய அணியொன்றை அமைத்து ஒன்றுபட்டு வேண்டும் என்று இரா ஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான தயான் ஜயதிலக வலியுறுத்தியுள்ளார்.**

தற்போதைய நிலையில் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே சாத்தியமான விடயமாக இருக்கின்றது. அத்தோடு இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷிரிங்லாவின் இலங்கை வருகையின் போதும் இந்தியா தனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நிறைவுக்கு வந்த போது தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக இந்தியாவுக்கு வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். அதற்கு அப்பால் சென்று அதிகாரங்களை பகிர்வதாகவும் அறிவித்திருந்தார். இருப்பினும், அவரைச் சூழவிருந்த பருந்துகள் அவ்விதமான செயல்பட்டை முன்னெடுப்பதற்கு அவருக்கு சந்தர்ப்பத்தை அளிக்கவில்லை. இவ் விதமான நிலையில் புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக பேசப்பட்டு சில காலம் வீணடிக்கப்பட்டது.

தற்போது, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக உள்ளார். இவருடைய காலத்தில் இலங்கை சீனாவின் பக்கம் அதிகமாக சாய்ந்து விட்டது என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அவருடன் சந்திப்பை நடத்திய இந்திய வெளிவிவகார செயலாளர் 13ஆவது அரசியலமைப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார். இதன்போது, 13ஆவது திருத்தச்சட்டத்தின் பலத்தையும், பலவீனங்களையும் புரிந்து கொண்டு அதன் படி செயல்பட வேண்டிய அவசரத் தேவை உள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்துள்ளார்.

இந்த ஒற்றைவரி கருத்து மிகவும் ஆழமானது. அவர் இவ்விதமான செயல்பாட்டை முன்னெடுக்க வேண்டியது இரண்டு நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகளுக்கு மிகவும் முக்கியமானது. ஏனென்றால் 2009இற்கு பின்னர் ஜெனிவா உள்ளிட்ட பல்வேறு சர்வதேச தளங்களில் இந்தியாவின் செயல்பாடுகளை கோட்டாபய புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இலங்கைக்கு தூணாக இருக்கும் இந்தியாவை புறமொதுக்கி விட முடியாது. எனவே, கோட்டாபயவும் புதிய அரசியலமைப்பு விடயத்திற்கு அப்பால் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும். இது பிராந்திய அரசியலுக்கும் நன்மையானது.

அதேநேரம், இந்த விடயத்தில் தமிழ்த் தரப்புக்கள் ஏகோபித்த நிலைப்பாட்டிற்கு வரவேண்டியுள்ளன. தற்போதைய நிலையில் 13ஆவது திருத்தச்சட்டமே சாத்தியமானது என்பதை இந்தியா வெளிப்படுத்தி விட்டது. அதனை முழுமையான நடைமுறைப்படுத்துவதே முதற்கட்ட வெற்றியாக இருக்கும்.

இதற்காக தமிழ் தரப்புக்கள் தமக்குள் காணப்படும் அரசியல் நிலைமைகளை விடுத்து ஐக்கிய அணியாக பொதுத்தளமொன்றுக்கு வர வேண்டும். இதன் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெ டுக்க வேண்டும். தற்போதைய நிலையில் அதுவே ஒரே தெரிவாக உள்ளது. அதற்கு அப்பால் வேறொன்றும் இல்லை என்றார். (ஐ)

# 20இன் தோல்வியை ஜனாதிபதி ஏற்பு; 19இன் மூலம் ஆட்சியை தொடருங்கள்

## ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஒக். 11

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனக்கு அரசியல் அனுபவம் குறைவு என்பதால் பிரதமர் முன்வந்து ஏனைய அனுபவம்மிக்க அமைச்சர்களுடன் இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம், அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தோல்வியடைந்தமையை அவர் ஏற்றுள்ளார். எனவே, அதனை இரத்து செய்து அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தை நிர்வகிக்க வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட காணொலியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவரின் அரசியல் அனுபவம் வரையறுக்கப்பட்டவை என்றும், எனவே பிரதமர் முன்வந்து அரசியல் அனுபவம் மிக்க அமைச்சர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது சிறந்தவொரு நிலைப்பாடாகும். காரணம் 20ஆவது அரசமைப்பு திருத்தம் தோல்வி என்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அந்தத் திருத்தத்தின் காரணமாக அமைச்சரவை அரசமைப்பு இல்லாமல் போனது. பொருளாதாரத்திலும் கொரோனாவிலும் அரசாங்கத்திற்குள் ஓர் அரசாங்கம் காணப்பட்டது.

இதேபோன்று அரிசி விலை தொடர்பிலும் அரசாங்கத்திற்கு வெளியில் அரசாங்கமொன்று காணப்பட்டது. இதன் பிரதிபலன் என்ன? நாட்டின் பொருளாதாரம் முழுமையாக இல்லாமல் போனது. எதிர்பார்ப்புக்கள் சரிவடைந்தன. அவ்வாறெனில் இந்த முறைமையின் மூலமாக சாதகமான பிரதிபலன் கிடைக்கவில்லை.

எனவே, ஜனாதிபதி தெரிவித்ததைப் போன்று சம்பிரதாய அமைச்சரவை நிர்வாகத்திற்கு செல்வது சிறந்தது. எனவே 20ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தை நிர்வகித்துச் செல்ல வேண்டும் -என்றார்.(ஐ)

# மோட்டார் திணைக்களத்தை விரிவுபடுத்துவதற்கு உத்தரவு



கொழும்பு, ஒக். 11

மோட்டார் போக்குவரத்துத் துறையின் சேவைகளை மேலும் விரிவுபடுத்துமாறு போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கு அமைவாக வாகனப் பதிவு, சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குதல் மற்றும் வாகனங்களை மாற்றுவது போன்ற ஒரு நாள் சேவைகள் விரிவுபடுத்தப்படும்.

தற்போது ஒரு நாள் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் சேவை வெரஹெர, அம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் மோட்டார் போக்குவரத்து துறையின் அலுவலகங்களில் மட்டுமே செயலில் உள்ளது.

ஒருநாள் வாகன பதிவு சேவை யாழ்ப்பாணம், நாரஹேன்பிட்டி, கம்பஹா, அனுராதபுரம், அம்பாந்தோட்டை, குருநாகல் மற்றும் அலுவலகங்களில் மட்டுமே உள்ளது. இந்த சேவைகளை விரிவுபடுத்தவும், 25 மாவட்டங்களிலும் நிறுவப்பட்ட கிளை அலுவலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை வழங்கவும் அமைச்சர் உத்தரவுகளை பிறப்பித்தார்.

மின்-மோட்டார் முறையை அமுல்படுத்துதல், வாக இலக்க விநியோகிப்பதற்கான பொதிகள் முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் துறை மற்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான சேவைகளை ஒருங்கிணைப்பது போன்ற திட்டங்கள் விரைவாக செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் போக்குவரத்து அமைச்சர் கூறினார். (ஐ)




# மீள்குடியேறிய முஸ்லிம் பெண்களின் வாழ்வாதாரம்சார் சவால்கள்



**கலாநிதி பகீரதி ஜீவேஸ்வரா**

இலங்கையில் உள்நாட்டுப்போர் நிறுத்தப்பட்டு ஒரு தசாப்தம் முடிந்த நிலையிலும், மூன்று தசாப்தங்களிற்கும் மேலாக நடந்த போர் விட்டுச் சென்ற விளைவுகளின் தாக்கங்களை இன்றும் சமூக விஞ்ஞானிகள் ஆய்வு செய்தவண்ணமே உள்ளனர். ஒரு பல்பண்பாட்டு மக்கள் வாழ்ந்த சமூகத்தில் போரின் பின்னர் சிறுபான்மை சமூகங்களிடையேயான பரஸ்பர இடைவினைகளின் இயக்கத்தை கண்டறிந்து ஊக்குவித்தலும், இன ஒற்றுமைப்பாட்டையும், இனநல்லிணக்கத்தையும் ஏற்படுத்தலும போரிற்குப் பின்னரான ஆய்வாளர்களின் முக்கிய பணிகளிலொன் றாக அமைகிறது. போரில் பலியானவர்களினுள் பலியாகிய இனமாக வடக்கில் மீளக்குடிதிரும்பி வாழும் முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். 1990 இல் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட பின்னர் தற்போது மீளக்குடியமர்ந்து வடக்கில் வாழும் முஸ்லிம்களின் வாழ்வாதாரம்சார் சவால்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியவை.

சர்வதேச கூட்டுறவுக்கான ஜேர்மன் சமூகம் (GIZ) எனும் அமைப்பின் அனுசரனையில் 'இலங்கையில் நல்லிணக்கச் செயன்முகைளைப் பலப்படுத்தல்' எனும் திட்டத்தின் கீழ் இவ்வாய்வு செய்யப்படுகிறது. இவ்வாய்வு முஸ்லிம் பெண்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதார முயற்சிகள், அதனை முன்னெடுப்பதில் உள்ள சிக்கல்கள் என்ற தளங்களில் முன்னெடுக்கப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தின் சோனகத்தெருவில் வசிக்கும் சில முஸ்லிம் பெண்களுடனான ஆரம்ப கலந்துரையாடல்களின் போது பெற்றுக்கொண்ட தகவல்கள் இங்கு பதிவிடப்படுகின்றது.

இலங்கை தேசிய இனப்பரப்பில் முஸ்லிம் சமூகத்தின் மீது இடம்பெறும் தொடர்ச்சியான அழுத்தங்களைத் தரும் சம்பவங்களாக, வடக்கின் இனச்சுத்திகரிப்பு, அக்குறன, திகன சம்பவம், ஈஸ்டர் தாக்குதல், தற்போது கொரோனா தொற்றுக்குட்பட்டு இறக்கும் முஸ்லிம் உடல்களை தகனம் செய்தல் வேண்டும், முஸ்லிம் பெண்கள் பொதுவெளிகளில் முகம் மறைத்து செல்லக் கூடாது என்ற அரசின் 'தேசிய பாதுகாப்பின் பேரிலான' முன்னெடுப்புக்கள் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின் மீதான இனரீதியான ஒடுக்குமுறைகளாகவே உணரப்படுகின்றன. இவை இலங்கை ஒரு பன்மைத்துவ தேசமாக நிலைபெறுவதற்கு நீண்டகாலம் செல்லும் என்பதையும் கோடு காட்டி நிற்கின்றன.

முஸ்லிம் இனக்குழுமம் ஒரு சிறுபான்மை இனமாக பேரினவெளியில் இருந்து எதிர்கொள்ளும் மேற்குறித்த சவால்களுக்கு அப்பால், முஸ்லிம் சமூகத்திற்குள்ளேயே உள்ள சில சமூக உராய்வுகளும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை. இங்கு குறிப்பாக முஸ்லிம் பெண்கள் மீது சிறுபான்மை இனம், பால்நிலை, பாலியல், வகுப்பு, மதம், பிராந்தியம், மீள்குடியேறியோர் என்ற அடையாளங்கள் இடைவெட்டும் கருத்தமைவு (intersectionality) வழியான புறநிலைப்படுத்தல்களும் அவர்களின் வாழ்வாதார, முன்னெடுப்புக்கள், ஆதரவு வலையமைப்பு, வலுவூட்டல் என்பவற்றில் நேர் நிலையாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன.

யாழ்ப்பாண சோனகத்தெரு, நகர மையமாகையால் இங்கு இடவசதி என்பது முதனிலை மட்டுப்பாடாக உள்ளது. இதனால் இங்கு வாழ்கின்ற முஸ்லிம்கள் வர்த்தகம், வியாபாரம் ஆகிய இரண்டையுமே தமது முக்கிய வாழ்வாதாரத் தொழில்களாகக் கொண்டுள்ளனர். பெண்கள் 1990க்கு முன் வெளியில் வேலைக்குச் செல்லவில்லை. ஆண்கள் குடும்பத்திற்கான வருவாயை ஈட்டும் முயற்சியில் ஈடுபட்டு வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்கி வந்தமையால் பெண்கள் வெளியில் செல்ல வேண்டிய தேவையும் எழவில்லை. தற்போது நிலமைகள் மாறிவிட்டன.

புத்தளம், நீர்கொழும்பு போன்ற பிற மாவட்டங்களிற்கு இடம்பெயர்ந்த முஸ்லிம் பெண்கள் பலர் புடவைத் தொழிற்சாலை, உப்பு உற்பத்தி நிலையம் போன்ற பல வெளியிடங்களிற்கு வேலைக்குச் சென்றனர். தற்போது வடக்கிற்கு திரும்பி வரும் முஸ்லிம்கள் இரண்டாம் தலைமுறையே. மீள்குடியமர வருவதாக பதிவு செய்த கிட்டத்தட்ட மூவாயிரம் (3000) குடும்பங்களில் அறுநூறு (600) வரையான குடும்பங்களே மீளக்குடியமர வந்திருந்தார்கள். திருமணங்கள் அதிகரித்ததன் காரணமாக தற்போது ஆயிரத்து நானூறு (1400) குடும்பங்கள் வரை வாழ்கிறார்கள். நிலமற்றவர்கள் வாடகை வீடு, உடைந்த வீடுகளிலேயே குடியிருக்கிறார்கள். சொந்தகாணி இல்லாது பலர் வீட்டுத் திட்டம் எதுவும் பெறுவதற்கும் வாய்ப்பு இல்லை.

பல முஸ்லிம்கள் இருபது வருட இடப்பெயர்வின் பின் தமது சொந்த நில உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் இருப்பதாகக் கூறுகின்றனர். குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை கூடியமையினால் குடியிருப்பு பற்றாக்குறை நிலவுவதாகவும் கூறுகின்றனர். நிலத்திற்கான தேவை உள்ளது. ஆனால் அது பூர்த்தி செய்யப்பட்டதாக இல்லை.

நகரவாழ்வைப் பொறுத்த வரையில் நிலையான நீடித்த வேலைவாய்ப்பு என்பதும் கடினமாகவே உள்ளது. இதனால் வருமானம் தேடும் செயற்பாடுகளில் ஒரு நிலையான தன்மை இல்லை. ஒரு நிலையான வருமானம் இன்றி திட்டமிட்ட வாழ்வைக் கொண்டு நடத்துவது என்பதும் இங்கு கடினமானது.

பெண்கள் சிலர் பிட்டு, இடியப்பம், சோற்றுப் பார்சல் கொடுத்தல் போன்ற வருமானம் ஈட்டும் பணிகளில் ஈடுபடுகின்றனர். இவர்களால் தொடர்ந்து இவ் வருமானம் ஈட்டும் செயற்பாட்டில் ஈடுபடவும் முடியாது உள்ளது. ஏனெனில் முதலீடுகள் போதியளவு இன்மையால் தனியாள் சுயதொழில் முயற்சிகள் பல உரிய விளைவுகளைத் தரவில்லை. உதாரணமாக உணவு செய்து விற்கும் பெண்கள் உணவு செய்து கொடுத்த பின்னரே அதற்கான கூலியைப் பெறுகிறார்கள். இதற்கு முன் அவர்களுக்கு உணவுப் பொருட்களை வாங்குவதற்கு நிதி வேண்டும். அத்துடன் உடைகள் தைத்து விற்கும் போது சிலர் கடனுக்கு வேண்டிச் சென்று நீண்ட காலத்தின் பின்பே உரிய பெறுமானத்தை வழங்குகின்றனர். அத்துடன் சந்தையில் எப்போதும் போட்டி நிலவுகிறது. ஒரே தொழிலில் இன்னொருவர் ஈடுபடத் தொடங்கும் போது இது வரை கிடைத்த வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படுகிறது. பொம்மை வெளி பிரதேசத்தை அண்டிய பெண்கள் சிலர் கடற்கரைக்கு சேர்ந்து சென்று மட்டி பிடித்து விற்கிறார்கள்.

அமைப்புக்களால் வழங்கப்படும் வருமானம் ஈட்டும் திட்டங்கள் பொருத்தப்பாடு இல்லாது வழங்கப்படுதலும் இங்கு இடம்பெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாடசாலை செல்லும் பிள்ளைகளும் கல்வியில் அதிக அக்கறை காட்டுவது இல்லை. பலர் க.பொ.த சாதாரண தரத்தை பூர்த்தி செய்வதற்கே இங்கு சிரமப்படுகின்றனர். உயர்தரம் படிக்கும் ஆர்வம் பலரிடம் இல்லை. கட்டிளமை பருவத்தினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் சென்று தொழிற்பயிற்சி பெறவும் ஆர்வம் காட்டுகிறார்கள் இல்லை. இளையோர் மத்தியில் அதிகரித்துவரும் போதை வஸ்து பாவனையும் குடும்பங்களில் வன்முறை அதிகரிப்புக்கும், உறவுகளின் விரிசல்களுக்கும் காரணமாகியுள்ளது. கல்வியில் குறைந்தளவு நாட்டம் காட்டுவதன் காரணமாக ஒரு சில குறிப்பிட்ட மக்களே அரசாங்க தொழிலில் உள்ளனர்.

முஸ்லிம்கள் சிலர் பொதுவங்கிகள், கடனடிப்படையில் பொருள்களை விற்கும் நிறுவனங்கள் போன்றவற்றில் வட்டி கட்டி பல உதவித்திட்டங்களில் இணைந்திருக்கிறார்கள். ஆனால் அதுவே ஒரு கிராமமட்ட உள்ளூர் அமைப்பினால் செய்யப்படும் போது விமர்சனங்களிற்கு உரியதாகிறது. ஒரு முஸ்லிம் ஆண் தனது மனைவி வெளியில் சென்று வேலை செய்வதற்கு ஆதரவு வழங்கினாலும் வெளியில் உள்ள பல முஸ்லிம் ஆண்கள் வேலைக்கு வெளியில் செல்லும் பெண்களை விமர்சிப்பர். முஸ்லிம் பெண்களுக்கு இதுவும் ஒரு சவாலாகவே இருக்கிறது. கோவிட்-19 தற்போது நகர்ந்து திரிந்து உடைகள் விற்றல், அழகுசாதனப் பொருட்கள் விற்றல், தைத்த உடைகளை சந்தைப்படுத்தல், உணவுகள் செய்து கொடுத்தல் தொழில்கள் சார்ந்து பல தடைகளை ஏற்படுத்தியுள்ளது. பெண்கள் அபிவிருத்தி மையத்தால் (WDC) தமிழ், முஸ்லிம் பெண்கள் இணைந்து தையல் செய்தனர். அல்லைப்பிட்டி, சாவற்கட்டு, சாத்தியக்காடு, நாவற்குழி போன்ற இடங்களில் தமிழ் வாடிக்கையாளர் நல்ல மரியாதையுடன் ஆண்- பெண் முஸ்லிம்களை நடத்துவதாகக் கூறுகின்றனர்.

நகரத்தில் நிலவும் தொடர்ச்சியான நிலப்பற்றாக்குறை, குடியிருப்பு பற்றாக்குறை, மீள்குடி திரும்பிய முஸ்லிம்கள் இழந்த நில உரிமைகளை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்கள், சனத்தொகை பெருக்கம், முஸ்லிம் சமூகத்திற்கு உள்ளேயான பால்நிலை, வகுப்பு என்பன ஒன்றையொன்று இடைவெட்டும் பெண்கள் மீதான புறநிலைப்படுத்தல்கள், இஸ்லாம் கூறும் வட்டி சார் நியமம், நிலையான வேலைவாய்ப்பு-வருமானம் இன்மை, முதலீடு இன்மை முதலிய சவால்களும், அதிகரித்த சந்தை போட்டிகளும், பொருத்தமில்லாத நிறுவனம் சார் திட்டங்களும், மேல்கூறிய எல்லாவற்றிலும் கொரோனாவின் தற்போதைய தாக்கமும் மக்கள் பங்குபற்றுதலுடனான முன்னுரிமைப்படுத்தலுடனும், பல்பங்குதாரர்களின் ஒருங்கிணைந்த ஈடுபாட்டுடனும் அணுகப்படவேண்டியவை; தீர்க்கப்பட வேண்டியவை. கல்வியில் ஆர்வம் இன்றி இருக்கும் இளைய தலைமைமுறையை கல்வியின் பால் நாட்டம் அதிகரிக்க செய்யவேண்டிய சவால் நிறைந்த பணியும் சோனகத்தெரு முஸ்லிம் சமுகத்திடம் உள்ளது. ஒரு சமூகம் வாழ்வதற்கான அடிப்படைக் கட்டுமானங்கள் அற்ற நிலையில் ஆக்கபூர்வமான மீள்குடியேற்றம் என்பது சாத்தியமற்ற விடயம் என்பதையும் மேற்குறித்த சில விடயங்கள் சுட்டிநிற்கின்றன. ■

**கட்டுரையாளர், விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் .**

# சீனாவிடம் இலங்கையை இந்தியா எப்படி இழந்தது? - 2

## உள்நாட்டு போர் முடியும்வரை இந்தியா இலங்கையில் ஒரு வலுவான பிடியை வைத்திருந்தது

**“இந்திரா காந்தி சிலோன் தேநீரை அருந்தியபடியே, அலரி மாளிகையில் ஜெயவர்த்தனவுடன் பேச்சு நடத்தியிருக்கலாம். ஒரு மூத்த தலைவராக, தனது நாட்டில் இருக்கும் தமிழ்மக்களுக்கு அவர் உதவவேண்டும் என்று இந்திரா காந்தி கேட்டுக்கொண்டிருந்தால் பிரச்னை தீர்ந்திருக்கும்”**



**[நேற்றைய சென்னை மடல் தொடர்ச்சி]**

இலங்கை பந்தயத்தில் இந்தியா தோற்றுவிட்டது என்று பலரும் அவநம்பிக்கையுடன் தெரிவித்துவருகிறார்கள். ஒரு முன்னாள் ஈழப் போராளியான என் நண்பர் ஒருவரும் அதில் அடங்குவார். இலங்கையின் அரசியல் மற்றும் சூழலைப் பற்றி அவர் எப்போதுமே துல்லியமாக அறிந்திருப்பார் என்பதால், அவருடனான சமீபத்திய தொலைபேசி உரையாடலை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். “பல வருடங்களாக இதை சொல்லிவருகிறேன் அண்ணா....” என்று தொடங்கியவர், ராஜபக்ஷ சகோதரர்களின் ஆதிக்கம்பற்றியும் அவர்களது காவல் தெய்வமான சீன டிராகனின் செயல்பாடுகள் பற்றியும் விவரித்தார். “டெல்லியில் இருக்கும் உங்கள் தலைவர்கள் இந்த சீன ஊடுருவலைத் தடுக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. அடுத்த 20,30 ஆண்டுகளுக்கு, இனிமேல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது” என்கிறார் அவர்.

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க காலம்தொட்டு சிங்களத் தலைவர்களின் விசுவாசத்தைப் பெற்றதோடு சீனா நிறுத்திக்கொள்ளவில்லை. செல்வாக்குள்ள தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சிலருடனும் சீனா நட்பு பாராட்டிவருகிறது. யாருடைய பெயரையும் இங்கே குறிப்பிட்டு, சில நண்பர்களின் மனதை நான் காயப்படுத்த விரும்பவில்லை.

ஆறு மாதங்களுக்கு முன்னால், கொழும்பின் துறைமுக நகரத்தை சீன முதலீட்டோடு அமைக்க இலங்கை பாராளுமன்றம் ஒரு சர்ச்சைக்குரிய மசோதாவைக் கொண்டுவந்தது. 225 மொத்த உறுப்பினர்களில் 149 உறுப்பினர்களின் ஆதரவோடு அந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. எதிர்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் சமூக அமைப்புகளும் இது இலங்கையின் இறையாண்மைக்கு எதிரானது என்று மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மசோதாவைப் பற்றிய பாராளுமன்ற விவாதத்தின்போது, “தமிழீழத்தைப் பற்றி நிறைய பேசுகிறீர்கள். ஆனால், இது சீழம் - சீன ஈழம்” என்றார் தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த எம். ஏ. சுமந்திரன். “உங்கள் சட்டங்களாலேயே நீங்கள் சீழத்தை உருவாக்குகிறீர்கள், அந்த இடத்தில் உங்களுக்கான கட்டுப்பாடு போய்விடும்” என்று சுமந்திரன் கவலை தெரிவித்தார். 2014இல் சீன அதிபர் ஜி ஜின்பிங் வருகை தந்தபோது 140 கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் கட்டப்பட்ட இந்த நகரத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. புகழ்பெற்ற காலிமுக கடற்கரையின் அருகே, கடலிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட இந்த பகுதியின் கட்டுப்பாடும் நிர்வாகமும் சீனாவுக்குப் போய்விடும் என்றும், சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங்குக்கு சவால்விடும் வண்ணம் கட்டமைப்புகளோடும் தொழில்நுட்பத்தோடும் இதை ஒரு வணிக மையமாக சீனா மாற்றும் என் றும் ஊடகங்கள் குறிப்பிட்டன. அதை மனதில்வைத்தே இந்த சொற்களை அவர் கூறியிருக்கக்கூடும்.



**- பகவான் சிங்**
- தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், எதிரணியைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்க - மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் ஆட்சிக்காலத்திலும் சுமுகமாகவே நடந்தது. கோட்டபாய - மஹிந்தவின் தற்போதைய ஆட்சிக்காலத்தில் இதை விரைந்து முடிக்கத் திட்டமிடப்பட் டுள்ளது. இது, சீனாவின் பொருளாதார சக்தியையும் ஆக்கிரமிப்புத் திட்டங்களையும் வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. “சீனாவின் பொக்கெற்” ஆழமானது, அவர்களால் அளவில்லாமல் செலவுசெய்ய முடியும். தேவைப்பட்டால், மேசைக்கடியில் கூட அவர்களால் காசு தர முடியும். ஆனால், இந்தியாவின் வறிய பட்ஜெட், ஒரு பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது. சிக்கனமாக செலவு செய்தால்கூட கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு கவனிக்கும் தலைமைக் கணக்கு தணிக்கையாளர் (Controller & Auditor General)க்கு பதில் சொல்லவேண்டியிருக்கிறது. இந்திய அரசாங்கத்துக்கு அது ஒரு பெரிய சவால்தான்” என்கிறார் இந்தியாவைச் சேர்ந்த ஒரு மூத்த அரசுப் பணியாளர்.

**உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த அதிபர் என்று அதிபர் ஜி ஜின்பிங்கைச் சொல்லலாம். இன்னும் சொல்லப்போனால், அமெரிக்க அதிபரைவிட இவருக்கு அதிகாரத்தின்மேல் இறுக்கமான ஒரு பிடி இருக்கிறது.**

### ‘வெளியிலிருந்து வருபவர்கள் எங்களை அதிகாரம் செய்ய முடியாது’

உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த அதிபர் என்று அதிபர் ஜி ஜின்பிங்கைச் சொல்லலாம். இன்னும் சொல்லப்போனால், அமெரிக்க அதிபரைவிட இவருக்கு அதிகாரத்தின்மேல் இறுக்கமான ஒரு பிடி இருக்கிறது. சீன அதிபர், செல்வாக்கு மிக்க சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர், இராணுவத் தலைவர் என்று மூன்று சிம்மாசனங்களில் அவர் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். புதிய நிலப்பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி, நாடுகளைத் தன்பக்கம் இழுக்கவேண்டும் என்று அவர் உறுதியாக இருக்கிறார். Belt and Road Initiative (BRI) என்ற திட்டம் நாடுகளை இணைப்பதற்கும், வளமான எதிர்காலத்துக்கும் உதவும் என்று சீனா சொல்லிவருகிறது. அதில் கோடிக்கணக்கில் முதலீடு செய்து, தனது கனவுகளை ஜின்பிங் நனவாக்க முயற்சி செய்கிறார். இந்தியா உள்ளிட்ட நட்பு நாடுகளும் பெரும்பாலான மேலை நாடுகளும் அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி உள்ள நிலையிலும் அவர் உறுதியாக இருக்கிறார்.

## கோடிக்கணக்கில் முதலீடு செய்து கனவுகளை நனவாக்க பீஜிங் முயற்சி

**வட இலங்கை மக்களின் ஆதரவைப் பெற்று தனது திட்டங்களை நிறுவுவதற்கும், இந்தியாவுக்கு எதிரான செயல்பாடுகளை மேற்கொள்ளவும் சீனா காய்நகர்த்துகிறது.**

பாகிஸ்தான் மட்டுமல்லாமல், தனது பெரும்பாலான அண்டை நாடுகளை BRI திக்குமுக்காடச் செய்வது டெல்லிக்குக் கவலை அளிக்கிறது. குறிப்பாக, இலங்கையில் ஏற்பட்டுள்ள சறுக்கல் என்பது, அமைதியான தென்னிந்தியாவில் ஒரு போர்ச்சூழலை உருவாக்கக்கூடும் என்பது டெல்லி தலைமையை காயப்படுத்துகிறது. தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள வட இலங்கை உட்பட, இலங்கையில் தனது முதலீடுகளையும் மனித வளங்களையும் பாதுகாத்துக்கொள்ள சீனா எந்த முடிவையும் எடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய உளவு அமைப்பு ‘றோ’ வின் செயல்பாடுகள்தான் 2015 இலங்கை அதிபர் தேர்ந்தலின்போது தனது தோல்விக்குக் காரணம் என்று மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகவே குற்றம் சாட்டியது நினைவிருக்கிறதா? அதையெல்லாம் கடந்து, ராஜபக்ஷ சகோதரர்கள் நெடுந்தூரம் பயணித்துவிட்டார்கள். இலங்கையின் அரசியல் விளையாட்டில் சீனா உத்வேகத்துடன் பங்கெடுத்துக்கொண்டு ஆதரவு தந்து வருகிறது. ராஜபக்ஷவின் இளைய சகோதரரான பஸில் ஜூலை எட்டாம் திகதி நிதியமைச்சராகப் பொறுப்பேற்றதால் இலங்கை அரசில் இப்போது ராஜபக்ஷ குடும்பத்தினர் ஏழு பேர் இருக்கிறார்கள். “வெளியாட்கள் எங்களை அதிகாரம் செய்ய முடியாது” என்று அவ்வப்போது அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ கூறுவது டெல்லியை நோக்கியதுதான்.

### இந்தியாவின் ஈழச் சறுக்கல்

முத்துபோன்ற கடல்தீவான இலங்கையை இந்தியா எவ்வாறு சீனாவிடம் இழந்தது என்ற வரலாறு சோகமானது. 2009இல் இலங்கை உள்நாட்டுப் போர் முடியும்வரை இந்தியா இலங்கையின் மீது ஒரு வலுவான பிடியை வைத்திருந்தது. சில இராஜதந்திரிகளோ, அதற்கு முன்னதாகவே சூழல் கசப்பாகிவிட்டதாகத் தெரிவிக்கிறார்கள். பிராந்தியத்தில் இந்தியா தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக ஆலோசகர் ஜி. பார்த்தசாரதி தந்த அறிவுரையின்படி ‘றோ’ (RAW)உளவு அமைப்பின்மூலம் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கைக்குத் தமிழ்ப் போராளிகளை இலங்கைக்குள் அனுப்பி, சிங்களப் பெரும்பான்மையினரிடம் எதிர்ப்பை ஈட்டிக்கொண்டார் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில், 13-14 வயது சிறுவர்கள் உட்பட பல ஈழப் போராளிக் குழுக்களுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் நிதியுதவியும் அளிக்கப்பட்டன. இலங்கை இராணுவத்துக்கு எதிராக செயல்படுவதற்காக அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். இந்தக் குழுக்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு, ஆதிக்கம் செலுத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இந்திய அமைதிப்படையை (Indian Peace Keeping Force -IPKF) வென்றது. இந்த வெற்றியின்மூலம் விடுதலைப்புலிகள் அமைப்பு உலகின் இரண்டாவது மிகப்பெரிய இராணுவத்தைத் தோற்கடித்த பட்டத்தையும் பெற்றுக் கொண்டது. 1991இல் விடுதலைப்புலிகளால், தேர்தல் பிரசாரத்துக்கு வந்திருந்த ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

ஈழப்போரின் முடிவின்போது, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டதோடல்லாமல், 70,000 பொதுமக்களும் கொல்லப்பட்டிருந்தனர். மனித வரலாற்றில் மிகக் கொடூரமான உள்நாட்டுப் போர்களில் ஒன்றாக ஈழப்போர் வரலாற்றில் இடம் பிடித்தது. இலங்கைத் தமிழர்கள் இந்தியாவுக்கு எதிரான மனநிலைக்குச் சென்றனர். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக டெல்லி பெரிதாக எந்த முயற்சியும் எடுக்கவில்லை.


(14 ஆம் பக்கம் பார்க்க...)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

23.



இவ்வுருவில் காணக் கூடிய சதுரங்கள் எத்தனை?

1. 11 2. 10 3. 8

24. பிள்ளைகள் மூத்தோருக்கு மரியாதை செய்யப்பழகுதல் வேண்டும். இதற்குரிய காரணம்.

1. மூத்தோர் நோயினால் வருந்துவதால்
2. மூத்தோர்

25. குப்பையிலே போட்டாலும் குன்றி மணி மங்காது என்ற பழமொழியின் கருத்து

1. நற்புகழ் என்றும் மங்காது
2. கோபம் சிந்தனைக்கு இடையூறு
3. எது செய்தாலும் ஆராய்ந்தே செய்ய வேண்டும்

26. எல்லை மீறினால் ஆபத்து என்ற கருத்தைத் தரும் பழமொழி

1. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
2. அடாது செய்பவர் படாது படுவர்
3. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

27. பண்ணையொன்றில் இருந்த ஆடு, மாடு, கோழி ஆகிய பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை 24 ஆகும். பண்ணையில் இருந்த கோழிகளின் எண்ணிக்கை பின்வருவனவற்றுள் எது?

1. 5 2. 7 3. 8

28. பின்வருவனவற்றில் ஆணிவேர்த் தாவரம்

1. குரக்கன் 2. நெல் 3. பப்பாசி

29. உடையில் பட்ட தற்க்கறையை அகற்ற மிக உகந்த பொருள்

1. மண்ணெண்ணெய் 2. சவர்க்காரம் 3. எலுமிச்சம்பழம்

30. குறித்த மாதம் ஒன்றின் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனின் அம்மாதத்தின் 12 ஆம் திகதி என்ன கிழமை

1. ஞாயிறு 2. திங்கள் 3. செவ்வாய

31. விசர் நாய்க்கடி நோயைப் பரப்பும் பிராணி அல்லாதது

1. நுளம்பு 2. நாய் 3. பூனை

32. இலங்கையில் அண்மையில் அமைக்கப்பட்ட துறைமுகம்

1. கொழும்பு 2. அம்பாந்தோட்டை 3. திருகோணமலை

33. பன்னிரண்டு என்ற உரோமன் எண்ணை உருவாக்குவதற்கு தேவையான தீக்குச்சிகள் எத்தனை?

1. 2 2. 5 3. 4

34. இரட்டை எண்களை மட்டும் கொண்ட தொகுதி எது?

1.

| | | | |
|---|---|---|---|
| 2 | 6 | 3 | 8 |

2.

| | | | |
|---|---|---|---|
| 12 | 16 | 1 | 14 |

3.

| | | | |
|---|---|---|---|
| 8 | 2 | 12 | 16 |


35. ஒரு பென்சிலின் விலை ரூபாய் 6.00 எனின் ஒரு டசின் பென்சிலின் விலை யாது?

1. ரூபா 20.00 2. ரூபா 84.00 3. ரூபா 72.00

36. 20 பக்கங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றில் இரண்டு பக்கங்களில் ஒரு கதை எழுதப்படுகிறது.

1. 10 2. 5 3.4

37. நிழற்றிய பகுதியை தசமத்தில் தருக




1. 0.2
2. 0.4
3. 0.5

38. 1 நீளமான கம்பி ஒன்றினை 40 அளவுள்ள சம துண்டுகள் வெட்டும் போது எஞ்சிய துண்டின் நீளம் யாது?

1. 20 2. 10 3. 100

39.



# மேலும் சில அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் இன்று அதிகரிக்கும் சாத்தியம்

கொழும்பு, ஒக். 11

எரிவாயு, சீமெந்து மற்றும் கோதுமை மா என்பவற்றின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் தற்போது அது சார்ந்த நிறுவனங்களுக்கு இடையிலான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இன்று அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




50 கிலோகிராம் நிறையுடைய சீமெந்து மூடையின் விலையை 200 ரூபாயால் அதிகரிக்க வேண்டுமென சீமெந்து விநியோகஸ்தர்கள், விடயத்துக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது யோசனை முன்வைத்திருந்தனர்.

எவ்வாறாயினும் குறித்த விலையை 100 ரூபாயால் மாத் திரம் அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண கோரியுள்ளார்.

இதற்கமைய 50 கிலோகிராம் நிறையுடைய சீமெந்து மூடையின் விலையை 97 ரூபாயால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 10 முதல் 12 ரூபாய் வரையில் அதிகரிக்கபடவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, எரிவாயுவுக்கான உரிய விலை இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை.

எரிவாயு நிறுவனங்கள் இது தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளன. (இ)

---

# மேலும் 115 பேர் கைது!

கொழும்பு, ஒக். 11

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 115 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று தெரிவித்துள்ளது.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 80 ஆயிரத்து 475 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# இலங்கையைவிட்டு வெளியேறுவதற்காக வரிசையில் நிற்கும் இளைஞர், யுவதிகள்!

## அரசு மீது நம்பிக்கையின்மையே காரணம் என்கிறார் அலவத்துவல



**கொழும்பு, ஒக். 11**

**இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர், யுவதிகள் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக வரிசையில் நிற்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சீ. அலவத்துவல தெரிவித்தார்.**

ஊடக சந்திப்பு ஒன்றில் அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தற்போதைய அரசை ஆட்சிப்பீடம் ஏற்றுவதற்காக வீதிகளிலும் மதில் சுவர்களிலும் ஓவியம் வரைந்த இளைஞர், யுவதிகளுக்கு இன்று நாட்டில் வாழ்வதை வெறுக்கின்றனர்.

இதன் காரணமாக குருநாகல், கொழும்பு உள்ளிட்ட உள்ளிட்ட குடிவரவு - குடியகல்வு திணைக்கள காரியாலயங்களில் கடவுச்சீட்டு பெற்றுக் கொள்ள நீண்ட வரிசையில் அவர்கள் காத்திருக்கின்றனர்.

இலங்கை ரூபாய் அதிகளவில் அச்சிடுவதால் அமெரிக்க டொலரின் பெறுமதி மேலும் மேலும் அதிகரிக்கும்.

இதனால் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்து பணவீக்கம் ஏற்படும். மக்கள் எவ்வளவு தொகை ரூபாக்களில் உழைத்தாலும் பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது சிரமங்கள் ஏற்படும். இந்த அரசின் மீது நம்பிக் கையின்றியே இளைஞர், யுவதிகள் வெளிநாடு செல்ல கடவுச்சீட்டுப் பெற்றுக் கொள்கின்றனர்” - என்றார்.(இ)

---

# கணவனின் வெறியாட்டத்தில் மனைவி வெட்டி படுகொலை

களுத்துறை, ஒக். 11

குடும்பத் தகராறு காரணமாக மனைவியைக் கணவன் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின்போது கணவன் மதுபோதையில் இருந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் களுத்துறை மாவட்டம், புளத்சிங்கள பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டா வீதி, கோவின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய பெண்ணின் கணவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 என்ற இலக்கத்துக்கு வழங்கப்பட்டத் தகவலுக்கு அமைவாக பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து பெண்ணின் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக ஹொரண வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



# இரத்தக்காயத்துடன் ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஒக். 11

மீரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிம்புலாவல கழிவு நீரோடையிலிருந்து 40 வயது நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் நேற்று தெரிவித்துள்ளது.

பிரதேச மக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து, மீரிஹான பொலிஸார் கடற்படையினரின் உதவியுடன் சடலத்தை மீட்டுள்ளனர்.

இரத்தக்காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம், களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மீரிஹான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

# மாப்பாண முதலியார் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

## பிரதமர் மஹிந்த இரங்கல்

கொழும்பு, ஒக். 11

குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் இழப்பு, நம் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“இலங்கைத் திருநாட்டிலே சமய சக வாழ்வுக்கு ஆதாரமாக இருக்கும் ஒரு கோயில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில். இங்கு இன, மத பாகுபாடு பாராட்டப்பட்டு யாரும் கண்டதில்லை. இறைவன் சந்நிதியில் அனைவரும் ஒன்றே என்ற உண்மையை நாம் இங்கு காண முடியும். நம் தாய்த்திருநாட்டின் உலகறிந்த அடையாளம் இந்தப் பெருமைமிகு ஆலயம். அருள் ஒளி வீசும் அற்புத ஆலயம்.

நம் தேசத்துக்குப் பெருமை தரும் வகையில், உலகப்புகழ் பெற்ற நல்லைக் கந்தன் ஆலயத்தின் நிர்வாகத்தைச் சிறப்புற முன்னெடுத்தவர்



குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார். அவருக்குக் கந்தப் பெருமானின் அருட்கடாட்சம் எப்போதும் துணை நின்றது. அதுவே குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரை செயலாற்றல் மிக்க அடியவனாக்கியது. அப்படிப்பட்ட மகோன்னத புருஷரின் இழப்பு, நம் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்” - என்றுள்ளது. (இ)

ஈழநாடு





## கொங்கோவில் படகுகள் மூழ்கி நூற்றுக்கும் மேற்பட்டோர் பலி!

கின்சாஷா, ஒக். 11

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்ட 9 படகுகள் ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 100 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்று அஞ்சப்படுகின்றது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில், ஆற்றில் மூழ்கி காணாமல் போனவர்களை தேடும் பணியின்போது நேற்றுவரை 51 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. 69 பேர் காணாமல் போயுள்ளனர். இந்த நிலையில் இவர்களில் பலர் இறந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேநேரம் மூழ்கிய படகுகளில் இருந்த 39 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர் என்று கொங்கோ ஜனநாயக குடியரசின் அதிகாரிகள் தெரிவித்தனர். மோசமான காலநிலை மற் றும் அதிக சுமை இந்த விபத்துக்குக் காரணமாக அமைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில்

# தியானன்மென் சிலையை அகற்ற நிர்வாகம் உத்தரவு!

ஹொங்கொங், ஒக். 11

ஹொங்கொங் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள தியானன்மென் சதுக்க படுகொலையை நினைவுகூரும் சிலையை அகற்ற நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

1989 சீனாவின் அடக்குமுறைகளை நினைவுகூரும் விதமாக 1997 ஆம் ஆண்டில் இந்த சிலை வடிவமைக்கப்பட்டது. இறந்த பல உடல்களை ஒன்றிணைத்தது போன்ற வடிவத்தில் இந்த சிலை அமைந்துள்ளது. ஹொங்கொங்கில் இடம்பெற்ற பல விழிப்புணர்வுகளில் முன்னணியில் இந்த உருவம் காணப்பட்டது.

இந்த நிலையில், பல்கலைக் கழக நிர்வாகம் விடுத்த அறிக்கையில், சமீபத்தைய அபாய மதிப்பீடு மற்றும் சட்ட ஆலோசனையின் அடிப்படையில் சிலையை அகற்ற முடிவு எடுக்கப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது.



சீனாவுக்கு எதிரான எதிர்ப்பை, பீஜிங் அரசாங்கம் மிக அண்மையில் அமைதியாக மாற்றியது. நவீன சீனாவில் தியானன்மென் இன்னும் தணிக்கை செய்யப்பட்டதாகவே உள்ளது. கோவிட் 19 தொற்றுப் பரவலை காரணம் காட்டி 2020ஆம் ஆண்டு தியானன்மென் படுகொலை நினைவேந்தல் தடுக்கப்பட்டது. அத்துடன், இந்த ஆண்டு, நினைவேந்தலை முன்னெடுத்த 9 ஜனநாயக சார்பு ஆர்வலர்களுக்கு 6 தொடக்கம் 10 மாதங்கள் வரை சிறைத் தண்டனை சீன அரசாங்கத்தால் விதிக்கப்பட்டது.

“இந்த சிலை வளாகத்திலிருந்து அகற்றப்படாவிட்டால் கைவிடப்பட்டதாகக் கருதப்படும். கூட்டணிக்கு வழங்கப்பட்ட இந்த சிலையை அகற்றுவது கடினம். இது சேதமடையும் வாய்ப்பும் உள்ளது. 24 ஆண்டுகளாக அங்கிருக்கும் சிலையை அகற்றுவது உண்மையில் நியாயமில்லை என்று சிலையை வடிவமைத்த ஜென்ஸ் கால்ஷியட் சுதந்திர ஹொங்கொங் என்ற ஊடகத்திடம் தெரிவித்தார்.

1989 ஆண்டு ஜனநாயகத்துக்கு அழைப்பு விடுத்து மாணவர்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர். பீஜிங் தியானன்மென் சதுக்கத்தில் பல வாரங்கள் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஜூன் 3ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்காக இராணுவம் அந்தப் பகுதிக்கு விரைந்தது. இராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டில் மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் மரணமடைந்தனர். 200 பேரே உயிரிழந்தனர் என்று சீனா இன்றுவரை கூறுகின்றது. ஆனால், பொது அமைப்புகள் ஊடகங்களின் தகவலின்படி 3,000 தொடக்கம் 10,000 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## அமெரிக்கா - தலிபான் நேரில் சந்தித்து பேச்சு!

கட்டார், ஒக். 11

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா தலைமையிலான படைகள் வெளியேறியபின்னர், அமெரிக்காவும் தலிபான்களும் முதன்முறையாக நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்து பேச்சு நடத்தின.

கட்டார் நாட்டில் நடந்த இந்தப் பேச்சில் தீவிரவாத அமைப்புகளை கட்டுப்படுத்துதல், ஆப்கானிஸ்தானில் இன்னும் இருக்கும் அமெரிக்க குடிமக்களை வெளியேற்றுதல், ஆப்கானில் மனிதாபிமான உதவிகளை வழங்குதல் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தலிபான்களுடன் தாங்கள் பேச்சு நடத்தி வருகிறோம் என்பதற்காக தலிபான்களை தாங்கள் அங்கீகரிப்பதாக பொருளாகாது என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து கடந்த ஓகஸ்டில் அமெரிக்கா தலைமையிலான படைகள் வெளியேறிய பின்பு ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற மிகப்பெரிய தாக்குதல் நடந்த மறுநாள் இந்த இருதரப்பு பேச்சு நடந்துள்ளது. (ஐ)

## ஆப்கான் தாக்குதலுக்கு பொறுப்பேற்றது ஐ.எஸ்.!

காபூல், ஒக். 11

ஆப்கானிஸ்தானில் மசூதியில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானோர் பலியாகினர். வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலுக்கு ஐ. எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. ஆப்கானிஸ்தானில் இயங் கும் ஐ. எஸ். கோரசன் என்ற பிரிவே இந்தத் தாக்குதலை நடத்தியது.

ஷியா முஸ்லிம்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் ஐ. எஸ். கோரசன் அமைப்பு தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## சீனாவின் அழுத்தத்துக்கு தாய்வான் அடிபணியாது!

தைபே, ஒக். 11

“சீனாவின் அழுத்தங்களுக்கு தாய்வான் அடிபணியாது. ஜனநாயக ஆட்சி தொடரும்”, என்று தாய்வான் நாட்டின் ஜனாதிபதி சாய் இங் - வென் கூறியுள்ளார்.

“நாம் எவ்வளவு சாதிக்கிறோமோ அவ்வளவு பெரிய அழுத்தங்களை சீனாவிடம் இருந்து எதிர்கொள்கிறோம்.”, என்றும் அவர் கூறினார்.

தாய்வானின் தேசிய தினமான நேற்று முன்தினம் ஜனாதிபதி சாய் இங் வென் ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், சீனாவுடன் தாய்வான் மீண்டும் ஒன்றிணைவதை நிறைவேற்றுவேன் என்று உறுதியாகக் கூறியிருந்தார். அவரின் இந்தக் கருத்துக்கு பதிலாகவே தாய்வான் தலைவரின் கருத்து அமைந்துள்ளது.

தாய்வான் தன்னை ஓர் இறையாண்மை கொண்ட நாடாகக் கருதுகிறது. அதே நேரம் சீனா ஒரு பிரிக்கப்பட்ட மாகாணமாகக் கருதுகிறது. கடந்த சில நாட்களில் தாய்வானின் வான் பகுதிக்குள் போர் விமானங்களை சீனா அதிக எண்ணிக்கையில் அனுப்பியது. தாய்வான் ஜனாதிபதிக்கான எச்சரிக்கையாக பார்க்கலாம் என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

“சீனாவை எதிர்த்தல்” என்ற தேர்தல் வாக்குறுதியை முன் வைத்து சாய் இங் வென் கடந்த ஆண்டு மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரேசிலில் தொற்று மரணம் ஆறு இலட்சத்தை கடந்தது!

பிரேசிலியா, ஒக். 11

பிரேசில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயால் பலியானவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்தை கடந்துள்ளது. உலகில் அமெரிக்காவை அடுத்து அதிகளவு கொரோனா மரணங்கள் இந்த நாட்டிலேயே பதிவாகியுள்ளன.

பிரேசிலில் தொற்றுநோய் தொடங்கி ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் நாட்டின் உத்தியோகபூர்வ தரவுகளின் படி இறப்பு எண்ணிக்கை நேற்று காலை வரை 600,880 ஆக பதிவாகியது.

இதேநேரம் அமெரிக்காவில் மொத்த இறப்புக்கள் நேற்றுக் காலை வரையான தரவுகள்படி 733,822 ஆக உள்ளது.

பிரேசிலின் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ தொற்றுநோயை கையாண்ட விதம் தவறானது.

இதுவே, நாட்டில் கொரோனா தொற்று மற்றும் மரணங்கள் தீவிரமாகக் காரணம் எனக் கடுமையான விமர்சனங்கள் தொடர்ச்சியாக முன் வைக்கப்பட்டு வருகின்றன. (ஐ)



# மும்பை அணி தோல்வி!

அபுதாபி, ஒக். 11

ஹைதராபாத் அணியை 42 ஓட்டங்களால் மும்பை அணி வெற்றி கொண்டது. ஆனாலும், இந்த வெற்றியின் மூலம் அந்த அணியால் இறுதியாட்டத்துக்கு முந்தைய சுற்றுக்கு (பிளே ஓவ்) தகுதி பெற முடியவில்லை.

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் வெள்ளிக்கிழமை அபுதாபியில் நடந்த ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பாட்டத்தை மும்பை இந்தியன்ஸ் அணி தெரிவு செய்தது. இதன்படி மும்பை அணி அதிரடியாக ஆடி 9 விக்கெட் இழப்புக்கு 235ஓட்டங்களை குவித்தது.

இசான் கிஷான் 32 பந்துகளில் 84 ஓட்டங்களை குவித்தார். இதில் 11 பௌண்ட்ரிகளும், 4 சிக்ஸர்களும் அடங்கும். இதேபோல் சூர்யகுமார் யாதவும் 40 பந்துகளில் 13 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களை விளாசி 82 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றுக்கொடுத்தார்.

ஹைதராபாத் அணி தரப்பில் ஜசன் ஹோல்டர் 4 விக்கெட்களை வீழ்த்தினார். ரஷீத் கான், அபிஷேக் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

இதையடுத்து 236 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஹைதராபாத் அணி களமிறங்கியது. ஆரம்ப ஆட்டக்காரர்கள் பொறுப்பாக ஆடினர். ஜசன் றோய் 34 ஓட்டங்களுடனும் அபிஷேக் சர்மா 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து இறங்கிய அணித் தலைவர் மனீஷ் பண்டே பொறுப்புடன் ஆடி அரைச் சதமடித்தார். ஏனையவர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர்.

இறுதியில், ஹைதராபாத் அணி 8 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. மனீஷ் பண்டே 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதனால் மும்பை அணி 42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மும்பை அணி சார்பில் பும்ரா, கவுல்டர் நைல், நீஷம் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். இந்தப் போட்டியில் மும்பை வெற்றி பெற்றாலும் அதன் இறுதியாட்டத்துக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை அந்த அணி இழந்தது.

### இருபது - 20 உலகக்கிண்ணம்

# பாகிஸ்தான் அணியில் மாலிக் சேர்க்கப்பட்டார்!

இஸ்லாமாபாத், ஒக். 11

இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கான பாகிஸ்தான் அணியில் சொஹைப் மக்சூத்துக்குப் பதில் சொஹைப் மாலிக் சேர்க்கப்பட்டுள்ளார்.

சொஹைப் மக்சூத் காயம் காரணமாக உலகக் கிண்ணத் தொடரில் இருந்து விலகியுள்ளார். இதைத் தொடர்ந்தே பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சொஹைப் மாலிக்கை தெரிவு செய்துள்ளது.

“மாலிக்கின் அனுபவம் ஒட்டுமொத்த அணிக்கும் பயன்படும்”, அணியின் தெரிவுக்குழு தலைவர் முஹமது வசீம் தெரிவித்துள்ளார்.

மாலிக் பாகிஸ்தானுக்காக 116 இருபது -20 போட்டிகளில் விளையாடி 2,335 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 28 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார். (ஐ)




# ஆப்கானிஸ்தான் அணியின் ஆலோசகராக அண்டி பிளவர்

காபூல், ஒக். 11

இருபது - 20 உலகக் கிண்ண ஆப்கானிஸ்தான் அணியின் ஆலோசகராக சிம்பாப்வே அணியின் முன்னாள் தலைவர் அண்டி பிளவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், இருபது-20 உலகக் கிண்ண போட்டிகளுக்கு முன்னதாக அண்டி பிளவர் அணியுடன் இணைவதை உறுதிப்படுத்தியது.



அண்டி பிளவர் முன்னர் 2009 - 2014 இடைப்பட்ட காலத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்தார்.

இவரின் நியமனம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் அஜிசுல்லா பாஸ்லி, “அண்டி பிளவர் ஆப்கான் அணியுடன் இணைந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அவரின் பரந்த அனுபவம் இருபது -20 உலகக் கிண்ணத்தில் எமக்கு உதவ மிகவும் பயனுள்ளதாக இருக்கும்”, என்றார்.

அண்டி பிளவர் சிம்பாப்வே அணிக் காக 63 டெஸ்ட் மற்றும் 213 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரொனால்டோ அதிரடி; போர்த்துக்கல் வெற்றி!

அல்மன்சி, ஒக். 11

கிறிஸ்ரியானோ ரொனால்டோ தனது 112ஆவது சர்வதேச கோலை கட்டார் அணிக்கு எதிராக அடித்துள்ளார். இந்தப் போட்டியில் 3 - 0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வெற்றி பெற்றது.

36 வயதான ரொனால்டோ கடந்த மாதம் ஈரான் நாட்டின் வீரரான அலி டேயியின் 109 கோல் சாதனையை முறியடித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை உலகக் கிண்ணத்தை நடத்தும் கட்டார் நாட்டுடன் நட்பு ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் போர்த்துக்கல் அணி விளையாடியது.

இதில், 37ஆவது நிமிடத்தில் ரொனால்டோ, 48ஆவது நிமிடத்தில் ஜோஸ் பொன்ரே, 90ஆவது நிமிடத்தில் அந்ரே சில்வா ஆகியோர் கோல்களை அடித்தனர். இதன் மூலமே, 3 - 0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் கட்டாரை வெற்றி கொண்டது. (ஐ)





# எம்மா அதிர்ச்சி தோல்வி!

கலிபோர்னியா, ஒக். 11

அமெரிக்க கிராண்ட்ஸலம் சம்பியனான பின்னர், பிரிட்டனின் எம்மா ரடுகானு தான் எதிர்கொண்ட முதல் போட்டியிலேயே தோல்வியை தழுவினார்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடக்கும் இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் தொடரில் பெலாரஸின் அலியாக்சாண்ட்ரா சஸ்னோவிக்கிடம் அவர் தோல்வியை தழுவினார்.

தரவரிசையில் 22ஆவது இடத்தில் இருக்கும் ரடுகானு, முன்னதாக கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸில் தொடர்ச்சியாக 11 வெற்றிகளை பெற்று சம்பியனானார்.

இந்தநிலையில், 100ஆவது இடத்திலுள்ள சஸ்னோவிக்கை எம்மா நேற்று முன்தினம் எதிர்கொண்டார். இந்தியன் வெல்ஸின் முதல்சுற்று போட்டியான இந்தப் போட்டியில் 6 -2, 6- 4 என்ற செற்களில் எம்மா தோல்வியை தழுவினார். (ஐ)

# ‘பலன் டி ஓர்’ பட்டியலில் ரொனால்டோ, மெஸ்ஸி!

பாரிஸ், ஒக். 11

சிறந்த உதைபந்தாட்ட வீரருக்கான ‘பலன் டி ஓர்’ விருது பட்டியலில் மெஸ்ஸி, ரொனால்டோ மீண்டும் இடம்பெற்றுள்ளனர்.

பிரான்ஸ் உதைபந்தாட்ட பத்திரிகை சார்பில் சிறந்த வீரருக்கான ‘பலன் டி ஓர்’ (தங்க பந்து) விருது வழங்கப்படுகின்றது. உலகம் முழுவதும் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் வாக்களித்து சிறந்த வீரரை தேர்வு செய்வர்.

இந்த விருதை அதிக முறை கைப்பற்றிய வீரர்களில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி, முதலிடம் பெற்றார். இவர் ஆறு முறை (2009, 10, 11, 12, 15, 19) சிறந்த வீரர் விருது வென்றார். இதில் போர்த்துக்கல்லின் கிறிஸ்ரியானோ ரொனால்டோ (5) இரண்டாவதாக உள்ளார்.

கடந்த ஆண்டு கொரோனா தொற்று பரவலால் விருது அறிவிக்கப்படவில்லை. இந்த ஆண்டு விருது நவம்பர் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில், 30 வீரர்கள் கொண்ட பட்டியலை ‘பலன் டி ஓர்’ நிர்வாகம் வெளியிட்டது. இதில் வழக்கம் போல மெஸ்ஸி, ரொனால்டோ இடம் பெற்றுள்ளனர். இவர்கள் தவிர, போலந்தின் லெவண்டோவ்ஸ்கி, இத்தாலியின் ஜோரினோ, இங்கிலாந்து அணித் தலைவர் ஹரி கேன் ஆகியோருடன் பலர் இடம்பெற்றுள்ளனர். (ஐ)



ஈழநாடு



# சீனாவிடம் இலங்கையை...

**(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மாறாக, சீனா அதைச் செய்யவே முயற்சி செய்கிறது. வட இலங்கையில் இருக்கும் மக்களின் ஆதரவைப் பெற்று, தனது திட்டங்களை நிறுவுவதற்கும் இந்தியாவுக்கு எதிரான செயல்பாடுகளை மேற்கொள்ளவும் சீனா காய்நகர்த்துகிறது.

கடந்த காலத்திலிருந்து பாடம் படிப்பவர்கள், செய்த தவறையே மீண்டும் செய்யமாட்டார்கள் என்று சொல்வார்கள். ஆனால், அது இந்தியாவின் திட்ட வரைவியலாளர்களுக்குப் பொருந்தாது. சில கடந்தகாலத் தவறுகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் இலங்கை அதிபர் ஜூனியஸ் றிச்சர்ட் ஜெயவர்த்தன, ஆசியாவிலேயே மிகவும் பலவீனமான தலைவராக இருந்தார். அவரது இராணுவப் படையினரின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. படையினரின் உத்வேகமும் தளவாடங்களும் அதைவிடக் குறைவு. அப்போது, இந்தியா ஒரு சக்திவாய்ந்த நாடு, இலங்கையின் சிறுபான்மையினர்களான தமிழர்களின் பிரச்னையை ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் இந்திரா காந்தியால் தீர்த்துவைத்திருக்க முடியும். “நரி போன்ற தந்திரம் உள்ள ஜே.ஆருக்கு ஒரு முறை இந்திரா காந்தி தொலைபேசியில் பேசியிருந்தால், சிலோன் தேநீரை அருந்தியபடியே அலரி மாளிகையில் இருவரும் பேச்சு நடத்தியிருக்கலாம். சுமூகமான பேச்சின் போது, ஒரு மூத்த தலைவராகத் தனது நாட்டில் இருக்கும் தமிழ் மக்களுக்கு அவர் உதவவேண்டும் என்று இந் திரா காந்தி கேட்டுக்கொண்டிருந்தால் பிரச்னை தீர்ந்திருக்கும்” என்கிறார் ஒரு மூத்த இராஜதந்திரி.

வெளியுறவு அமைச்சகம், ‘றோ’ உளவு அமைப்பு, இராணுவ உளவுத்துறை எல்லாமாகச் சேர்ந்து, இலங்கையின் மீதான இந்திய செயல்பாடுகளைக் குழப்பிவிட்டது. வெளியுறவுத்துறை அமைச்சகம் ஈழப்பிரச்னையைத் துவக்கிவைத்தது. அதற்கான இராணுவ செயல்பாடுகளை RAW அமைப்பு கவனித்துக்கொண்டது. புலிகளின் எண்ணம், செயல்பாடுகள் ஆகியவற்றைத் திரும்பத் திரும்பத் தவறாக மட்டுமே புரிந்துகொண்ட இராணுவ உளவுத்துறை, மூன்று ஆண்டுகள் தனது தொடர் குளறுபடிகளின் மூலம் ஆயிரக்கணக்கான அமைதிப்படை வீரர்களின் மரணத்துக்குக் காரணமாக அமைந்தது. 1990இல் இந்தியாவிலும் இலங்கையிலும் மிகவும் கொடூரமான சூழலில் படைகள் பின்வாங்கும்வரை இது தொடர்ந்தது. இராணுவ உளவுத்துறை இப்போது இலங்கை விவகாரங்களில் தலையிடுவதில்லை என்றாலும், வெளியுறவுத்துறையும் ‘றோ’ அமைப்பும் தொடர்ந்து செயல்படுகின்றன என்பதைப் பல நிகழ்வுகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன. இது பாக்கு நிரிணை பிரச்னையை மேலும் குழப்பியடிக்கிறது. கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் ஒரு தமிழர்கூட இதுவரை தூதராக இருந்ததில்லை. டெல்லியிலிருந்துவரும் சுற்றறிக்கைகள் தவிர, நுணுக்கமான தமிழ்-சிங்களப் பிரச்னையைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது.

தனது ஈழத் திட்டத்தை இந்திரா காந்தி துவக்கியபோது, பெரும்பான்மையினரான சிங்களவர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தது. இந்தியா ஒரு பெரியண்ணனாக இருந்து, இலங்கையை இரண்டாக உடைக்கப் பார்க்கிறது என்று குற்றம் சாட்டப்பட்டது. மே 2009 ஈழப்போர் முடிந்தபோது, கசாப்புக் கடைக்காரராக இருந்து இனப்படுகொலையை நடத்திய மஹிந்த ராஜபக்ஷவுக்கு உதவியதாகக் கூறி, தமிழர்கள் இந்தியாவை வெறுத்தனர். வட இலங்கையில் இப்போது நடக்கும் சீனாவின் ஊடுருவலும் தமிழ்த் தலைவர்களுடன் சீனாவின் நட்பும் இந்த விலகலை அதிகப்படுத்தவே வாய்ப்புகள் அதிகம். சீன ஊடுருவலுக்கு எதிராக தமிழர்களை நிறுத்தவேண்டுமானால் கொழும்பில் பணியமர்த்தப்பட்டிருக்கும் டெல்லி அதிகாரிகள் விரைவாக செயல்படவேண்டும்.

**சீனாவை நோக்கி இலங்கையை தள்ளும் முயற்சி**

“ஈழ மக்கள் பிரச்னையை எடுத்துச் சொல்ல நேரம் கேட்டோம். ஆனால், ஒரு பதிலும் இல்லை. இந்தியாவுக்கு எங்கள்மேல் அக்கறை இல்லை” என்கிறார் லண்டனைச் சேர்ந்த புலம்பெயர் தமிழர் தலைவர் ஒருவர். மனித உரிமைக்கான ஐ. நா. ஆணையத்தில், ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த போர்க் குற்றங்களை ஆய்வு செய்வதற்கான தீர்மானம் கோரப்பட்டபோது, இந்தியா அதை ஆதரிக்கவில்லை என்று அவர் கசப்புடன் நினைவுகூர்ந்தார். “ராஜபக்ஷக்களின் ஆதரவைப் பெறலாம் என்று நினைத்தீர்கள், ஆனால், இப்போது அவர்கள் சீனாவுடன் நெருக்கமாகி விட்டார்கள்” என்கிறார். இந்தத் தீர்மானத்தின்போது இந்தியா வாக்களிக்கவில்லை, சீனா, தீர்மானத்துக்கு எதிராக கொழும்புக்கு ஆதரவாக வாக்களித்தது.

ஜூலை மாதம் ‘ஈழநாடு’ பத்திரிகையின் ஞாயிறு பதிப்பில் எழுதிய மூத்த பத்திரிகையாளர் ரஞ்சன் அருண் பிரசாத், “இந்தியாவா சீனாவா, இலங்கையின் உண்மையான நண்பன் யார்?” என்று கேள்வி எழுப்புகிறார். இலங்கை மக்கள் பலரும் டெல்லியின் அரசியலால் துன்பப்பட்ட பல நிகழ்வுகளை சுட்டிக்காட்டி, “தனது அலட்சியத்தாலும் இந்திய வெளியுறவுக் கொள்கையின் எதிர் மனநிலையாலும் இலங்கை மட்டுமல்ல, பல ஆசிய நாடுகளை சீனாவின் பக்கம் இந்தியா தள்ளியிருக்கிறது” என்று முடிவாகக் கூறுகிறார்.

“இத்தனை வருடங்களாக பெரும்பாலும் இந்தி பேசும் வட இந்தியர்களைத்தான் டெல்லி கொழும்புக்கு தூதராக அனுப்புகிறது. அவர்களுக்கு நமது மொழியோ பிரச்னைகளோ புரியாது. இப்போது உள்ள தூதர்கூட வட இந்தியர்தான். இந்தியாவின் அலட்சியத்தையே இது காட்டுகிறது” என்று எனது நண்பரும் கொழும்பில் வெளியிடப்படும் முக்கிய பத்திரிகையான ‘தமிழ் மிரர்’ின் முன்னாள் ஆசிரியருமான ஒருவர் கூறினார்.

இதுபற்றி ஓர் இந்திய முன்னாள் வெளிநாட்டு தூதுவரிடம் பேசினேன். அவரது பதில் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. “தமிழர்கள் யாரையும் கொழும்பு தூதரகத்துக்கு தலைவர்களாக அனுப்பக் கூடாது என்பது, வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் எழுதப்படாத விதி. சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் இலங்கை அரசிடம் நல்ல பெயர் வாங்கும் ஒரு நட்பு செயல்பாடாக இது இருக்கலாம். தமிழர்கள் ஒரு பொருட்டல்ல என்று இந்தியா நினைப்பதையே இது காட்டுகிறது. சவுதி அரேபியாவிற்கு இஸ்லாமியர்கள் அல்லாதவர்களை தூதுவராக அனுப்பக் கூடாது என்றும் ஓர் எழுதப்படாத விதி இருக்கிறது” என்றார். பனிப்போர் காலகட்டதுக்குப் பின்பு உலக நாடுகளிடம் நட்பு பாராட்ட விரும்பிய காங்கிரஸ் அரசின் முயற்சியாக இந்த விநோத முடிவு வந்திருக்கக் கூடும்.

“இதன்மூலம், இந்தியாவுக்கு இலங்கை அல்லது சவுதி அரேபியாவிடமிருந்து எதாவது ஒரு நட்புறவு கிடைக்குமா என்று அவரிடம் கேட்டேன். “அதெல்லாம் இல்லை. என்ன நடக்கிறது என்று நீங்களே வெளிப்படையாகவும் தெளிவாகவும் பார்த்திருப்பீர்களே” என்று உடனடியாக பதில் சொன்னார்.

இந்தியாவின் நிர்வாக பீடமான டெல்லியின் ‘சவுத் ப்ளாகி’ல் ஏற்பட்ட நிர்வாகக் குளறுபடிகள் நமக்குச் சொல்லும் கசப்பான உண்மை இதுதான்: தெற்கில் ஒரு போர் அரங்கம் விரைவில் வரும், அதனால் ஏற்படும் உயிரிழப்பும் பொருளாதாரப் பின்னடைவும் இந்தியாவால் எதிர்கொள்ள முடியாததாக இருக்கலாம்.

# டிசெம்பர் மாதம் மற்றுமொரு கொரோனா அலை அபாயம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.11

**இலங்கையில் டிசெம்பர் மாதமளவில் மற்றுமொரு கொரோனா வைரஸ் தொற்று அலை உருவாகும் அபாயம் உள்ளது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் கமல் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் தொற்று முடிவுக்கு வந்துவிட்டது என நினைத்துச் செயல்பட்டால் இந்த நிலை ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு, நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் கொரோனா வைரஸ் தொற்றை மறந்து செயல்படுகின்றனர் எனவும் அவர் சாடியுள்ளார். மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை தொடர்ந்து அமுலில் இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத் தியுள்ளார். (இ)



# இலங்கை இராணுவத்தில் 10,936 பேருக்கு தர உயர்வு

கொழும்பு, ஒக். 11

இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 567 இராணுவ அதிகாரிகள் மற்றும் 10 ஆயிரத்து 369 படையினர் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

படைகளின் பிரதம அதிகாரியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் பரிந்துரைக்கு அமைவாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்தத் தர உயர்வு வழங்கப்பட்டுள்ளத் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 8 சிரேஷ்ட பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல் நிலைக்கும், 17 கேணல்கள் பிரிகேடியர் நிலைக்கும், 42 லெப்டினண்ட் கேணல்கள் கேர்ணல் நிலைக்கும், 60 மேஜர்கள் லெப்டினன் கேர்ணல் நிலைக்கும், 256 கப்டன்கள் மேஜர் நிலைக்கும் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் 10 லெப்டினண்ட் அதிகாரிகள் கப்டன் நிலைக்கும், 2 ஆம் லெப்டினண்ட்கள் அதிகாரிகள் 152 பேர் லெப்டினன் நிலைக்கும், 22 கெடட் நிலை அதிகாரிகள் லெப்டினண்ட (பொதுப்பணி) நிலைக்கும் 2021 ஒக்ரோபர் 10 ஆம் திகதி முதல் தரமுயர்த்தப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கொள்ளையரின் தாக்குதலில் பெண்ணொருவர் படுகொலை

கம்பஹா, ஒக். 11

வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த இருவர், வீட்டிலிருந்த பெண்கள் இருவரைத் தாக்கிவிட்டு கொள்ளையில் ஈடுபட்டுள்ள நிலையில், தாக்குதலுக்குள்ளன இரு பெண்களில் ஒருவர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம், மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிடுவல்கொலட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பிட்டுவல்கொட, யக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 77 வயது பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில், இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 இற்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தாக்குதலில் மயக்கமுற்றிருந்த வயோதிபப் பெண்ணை உடனடியாக மீட்டு கம்பஹா வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

## புதிய அரசமைப்பு...

அத்துடன், நாட்டில் ஊழல், மோசடி களுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவ தில்லை என்றும், மீண்டும் பயங்கரவா தமோ அல்லது மத தீவிரவாத செயல்பாடு களோ ஏற்படாதவகையில் நாட்டை படையினர் அர்ப்பணிப்புடன் பாதுகாத்து வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

இராணுவத்தின் 72ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று ஞாயிற்றுக் கிழமை அநுராதபுரம் - சாலியபுர கஜபா படைப்பிரிவின் தலைமையகத்தில் இடம் பெற்ற விசேட நிகழ்வில் பங்கேற்ற பின் னர் உரையாற்றியபோதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

மேலும், ஒரே சட்டம் ஒரே நாடு திட் டத்தின் கீழ் நாடு மோசடிகள் அற்ற சரி யான முறையில் முன்னோக்கி செல்ல மக் கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கோவிட் - 19 தொற்றுப் பரவ லால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி யடைந்துள்ளது. இருப்பினும், குறிப் பிட்ட காலப்பகுதிக்குள், பொதுமக்களுக் காகப் பெரும் வேலைத்திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

உலகிலுள்ள இராணுவத்தினர் யுத்தத் துக்கு மாத்திரமன்றி, தேசத்தைக் கட்டி யெழுப்பவும் அர்ப்பணிப்புடன் செயல் பட்டு வருகின்றனர். எமது நாட்டின் முப் படையினர், தனிமைப்படுத்தல் மற்றும் தடுப்பூசி ஏற்றல் போன்ற சுகாதாரத் தரப் பினரின் பணிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி, கோவிட் - 19 ஒழிப்புக்காகச் செயல்பட்டு வருகின்றனர். அதற்காக அவர்கள் வழங்கிய அர்ப்பணிப்புடன் கூடிய சேவைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முப்படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் மன உறுதியை அதிகரிக்கச் செய்து, அவர்களுக்கான உத்தியோக பூர்வ அதிகாரங்களை முறையாக வழங்கி, தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க, கடந்த இரண்டு வருடக் காலப் பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீண்டும் நாட்டுக்குள் பயங்கரவாதமோ அல்லது மதத் தீவிரவாதச் செயற்பாடு களோ ஏற்படாத வகையில் நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அவர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின் றனர்.

மக்களுக்கு உறுதியளித்தவாறு, புதிய அரசமைப்பு மற்றும் புதிய தேர்தல் முறைமையை ஏற்படுத்துவதற்கும் நட வடிக்கை எடுக்கப்படும். ஊழல், மோசடி களுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவ தில்லை என்றும் அதற்காக, அனைத்து அதிகாரிகளும் மக்களுக்காக அர்ப்பணிப் புடன் பணியாற்ற வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில், பாதுகாப்பு செயலா ளர் (ஓய்வுபெற்ற) ஜெனரல் கமல் குண ரத்ன, இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா மற்றும் இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் எனப் பலர் பங்கேற் றனர். (ஐ)

## அரசியல் கைதி...

ராவார்.

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலை யில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர் பி.சி..ஆர். பரிசோதனைகளை அடுத்து நேற்று மதியம் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு உறவுகளுடன் இணைந் துள்ளார் என்று குடும்பத்தினர் தெரியப் படுத்தியுள்ளனர்.

இவர் கடந்த 20.05.2009 அன்று - போர் நிறைவுக்கு வந்த பின் விடுதலைப் புலிகளுடன் தொடர்பில் இருந்தார் என்ற சந்தேகத்தின் பெயரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டார்.

சுமார் ஒன்றரை வருட காலம் பயங்கர வாதத் தடுப்புப் பிரிவினரால் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டதன் பின்னர் கடந்த 15.02.2011 அன்று மொன ராகலை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத் தப்பட்டு சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். கடந்த 12 ஆண்டு களாக அவருக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்கள் எதுவும் தாக்கல் செய்யப் பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், சிரேஷ்ட சட்டத்தரணி பஞ்சாட்சரம் நீதிமன்றில் தர்க்க நியாயங் களைச் சுட்டிக்காட்டி கபிலனின் விடு தலையை உறுதி செய்யுமாறு மன்றில் முன்வைத்த கோரிக்கையைப் பரிசீலித்த நீதிமன்றம், குறித்த தமிழ் அரசியல் கைதிக்கு எதிராக குற்றத்தை ஒப்புவிக்க போதிய சாட்சி ஆதாரங்கள் காணப் படாத காரணத்தைக்கூறி அவரை நிரப ராதி என விடுதலை செய்துள்ளது. (இ)

## குமாரதாஸ்..

வர்கள், முக்கியஸ்தர்கள் அஞ்சலி செலுத்தினர். இதன் பின்னர் அவரின் இறுதி ஊர்வலம் இல்லத்தில் இருந்து ஆரம்பித்து செம்மணி இந்து மயானத்தை அடைந்தது.

வழிநெடுகிலும் பொதுமக்கள், வீதி களில் நின்றவர்கள் அஞ்சலி செலுத்திய துடன் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

செம்மணி இந்து மயானத்தில் நண் பகல் 12 மணியளவில் அவரின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமானது.

சுகாதார நடைமுறைப்படி பொதுமக் களின் பங்கேற்புடன் மிகவும் அமைதி யான முறையில் இறுதி ஊர்வலம் இடம் பெற்றது. (ஐ)

## கொரோனா...

ரத்து 331 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 35 பேரில் 17 பெண்களும், 18 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதில் பெண் ஒருவர் 30 வயதுக்குட் பட்டவர். 3 ஆண்கள், ஒரு பெண் என 4 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர் களாவர். 30 பேர் 60 வயதுக்கு மேற்பட் டவர்களாவர். இதில் 15 ஆண்களும், 15 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## லிட்ரோ...

231 ரூபாயால் அதிகரித்து புதிய விலை ரூ.520ஆக உள்ளது.

மாவட்டங்களின் தூரங்களுக்கேற்ப விலையில் மாற்றம் ஏற்படும். (ஐ)

## வாய்க்காலில்...

வீட்டுக்கு அண்மையாகவுள்ள குளத்தின் வாய்க்காலில் சிறுவனின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணை களை மானிப்பாய் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## பருத்தித்துறையில்...

படுத்த முடியாது பருத்தித்துறை பொலி ஸாருக்கு துணையாக மேலதிகமான நெல் லியடி பொலிஸாரும் அழைக்கப்பட்டு வன்முறைகளை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு தினங்களாக இரு பிரிவின ருக்கு இடையே காணப்பட்ட முரண் பாடு நேற்று மாலை 4 மணியின் பின்னர் குழு மோதலாக மாறியது. இதன்போது, பல வீடுகள் சேதமடைந்தன. வீட்டி லிருந்த பொருட்களும் அடித்து நொருக் கப்பட்டன.

அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் தவிர, வேறு பல பகுதிகளில் இருந்து அழைத் துவரப்பட்டவர்களே இந்தத் நடத்தினர் என்றும் கூறப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸார் வன்முறையை கட்டுப்படுத்த முயன்றனர். ஆளணி குறைபாட்டால் நெல்லியடி பொலிஸாரும் துணைக்கு அழைக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து நேற்றிரவு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதைத் தொடர்ந்து குறித்த பகுதி களில் இருந்து எவரும் வெளியே முடி யாதவாறு கட்டுப்பாடுகளை பொலி ஸார் அறிவித்துள்ளனர். இந்தத் தாக்கு தலின்போது ஐந்திற்கும் மேற்பட்ட வீடு கள் சேதமடைந்துள்ளன.

இதேநேரம், இந்த வன்முறையின் சேதவிபரங்கள் தொடர்பில் முழுமை யான விவரங்கள் உடனடியாகப் பெற முடியவில்லை. (ஐ- 02)

# ஜனாதிபதி கோட்டாபய திறந்து வைத்த நினைவுபடிகத்தில் தமிழுக்கு இடமில்லை!

### மனோ கணேசன் எம். பி. கவலை




கொழும்பு, ஒக். 11

இலங்கையின் முதல் பிரஜை மொழிக் கொள்கையை பின்பற்ற வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான மனோ கணேசன் தெரிவித்துள் ளார்.

72ஆவது இராணுவ கொண்டாட் டத்தை முன்னிட்டு அநுராதபுரம் சாலிய புரவிலுள்ள கஜபா படைப்பிரிவின் கட் டளைத் தலைமையகத்தில் கோட்டாபய ராஜபக்ஷ கிரிக்கெட் மைதானத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று திறந்து வைத்தார்.

ஜனாதிபதியால் திறக்கப்பட்ட நினைவுப் படிகத்தில் சிங்களம் மற்றும் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டிருந்தது டன், அதில் தமிழ் இடம்பெறாததை யடுத்தே மேற்கண்ட பதிவை தனது ருவிட்டர் பக்கத்தில் மனோ கணேசன் எம். பி பதிவிட்டுள்ளார்.

"விளையாட்டரங்கமாக இருக்க லாம்! விளையாட்டாகவே இருக்கலாம்! அன்னை இலங்கையின் பேரில், முதல் பிரஜை, அரசமைப்பின் மொழிக் கொள் கையை பின்பற்ற வேண்டும். அடுத்த மூன்று வருடங்களில் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ செய்யப்போகும் "பிழைதிருத்தங்களில்" மொழிகொள் கையை பின்பற்றுவதும் ஒன்றாய் இருக்க பிரார்த்திக்கிறேன்" என்று குறிப்பிட்டுள் ளார். (ஐ)

# நேற்று 720 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஒக். 11

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 720 பேர் நேற்று அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயி யல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர் களின் மொத்த எண்ணிக்கை 5 இலட் சத்து 26 ஆயிரத்து 383 ஆக உயர்வடைந் துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 468 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 80 ஆயிரத்து 97ஆக அதிகரித்துள்ளது. (இ)

# பே பால் சேவையை பெற இலங்கை நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 11

பே பால் (PayPal) சேவைகளைப் பெறுவதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்தியா, சிங்கப்பூர் மற்றும் அமெ ரிக்காவில் உள்ள பே பால் பிராந்திய அலுவலகங்களை அரசாங்கம் அணுகி யுள்ளது என்று மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ரி. எம். ஜே. வை. பி. பெர் னாண்டோ தெரிவித்தார்.

தற்போது வெளிநாட்டு கட்டணங் களை மட்டுமே பேபால் வழியாக செலுத்த முடியும். பே பால் மூலம் இலங்கை பணம் செலுத்த முடியாது.

இந்த சேவைகளை விரைவில் பெற முடியும் என்று அரசாங்கம் நம்புகிறது. பணம் செலுத்தும் சேவையைப் பெறு வதற்கும் வழங்குவதற்கும் இலங்கை தரப்பில் எந்த தடையும் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## முதல்பெண்...

தடுக்கும் நோக்கில் சிறீதரனின் அலுவல கம் முன்பாக இராணுவத்தினர் குவிக்கப் பட்டிருந்தனர். அத்துடன், அவரின் அலு வலகத்துக்கு செல்லும் வீதியின் நுழை வாயிலில் இராணுவத் தடை அமைத்து அந்த வீதியில் பயணித்தவர்களை சோதனை நடவடிக்கைக்கு படையினர் உட்படுத்தியிருந்தனர். (ஐ)

# லாப் எரிவாயு விலையும் மீண்டும் அதிகரித்தது!




கொழும்பு, ஒக். 11

லாப் எரிவாயு நிறுவனமும் உள் நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலையை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரித்தது.

இதன்படி, 12.5 கிலோ சிலிண்டர் ரூ. 984 அதிகரிக்கப்பட்டு புதிய விலையாக ரூ. 2840 அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள 5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை ரூ 393 உயர்த்தப் பட்டு புதிய விலையாக ரூ .1136 அறி விக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இன்னமும் தொடர்கின்றது கொரோனாவின் ஆபத்து!

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 11



**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று மற்றும் மரணங்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து வருவதால் தொற்று குறைந்துவிட்டது எனத் தவறாக எண்ண வேண்டாம் என்று மருந்தாக்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"குறிப்பாக இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பு ஒவ்வொரு நாளும் 200 பேர் இறக்கும் நாட்டில், தற்போது உயிரிழப்பு குறைவடைந்துள்ளது. எனினும், கொரோனாத் தொற்று முற்றிலும் போய்விட்டது என்று நினைப்பது மோசமான நிலைமையைத் தோற்றுவிக்கும்.

இந்த வைரஸ் மீண்டும் தீவிரமடையாது என்று எங்களால் உத்தரவாதம் அளிக்க முடியாது. மீண்டும் ஒரு புதிய அலை உருவாகி வருவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றது.

நாட்டில் கொரோனாத் தடுப்பூசி திட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இது தொடர்பான அனைத்து விவரங்களும் எதிர்காலத்தில் வெளியிடப்படும்" - என்றார். (இ)

## எரிந்த நிலையில் ஆணின் சடலம்!

கொழும்பு, ஒக். 11

எரிந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹங்வெல்ல பகுதியில் உள்ள விடுதி ஒன்றுக்கு அருகில் இருந்து குறித்த சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது

நுகேகொடை பகுதியைச் சேர்ந்த 70 வயது நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுமுன்தினம் மாலை முதல் குறித்த விடுதியில் தங்கியிருந்தார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஹங்வெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## சஜித் போன்று என்னையும் பொம்மையாக்க வேண்டாம்

### டயனா கமகே எம்.பி. கருத்து

கொழும்பு, ஒக். 11

"நான் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் பொம்மை இல்லை. இப்போதும் உறுப்பினரே. கட்சியின் உரிமையாளர் என்ற உறுப்பினராக இருக்கின்றேன். சஜித் பிரேமதாஸ போன்று என்னைப் பொம்மையாக்க வேண்டாம். அப்படி நான் நடந்துகொள்ள மாட்டேன்."

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து தான் நீக்கப்பட்டுள்ளார் என்று வெளியான செய்தி குறித்து அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் என்னை கட்சியில் இருந்து நீக்கியுள்ளார் எனக் கூறியதாகத் தெரிவித்து ஊடகவியலாளர்கள் என்னிடம் கேட்டனர். அப்படியொன்றும் நான் அறியவில்லை என்று அவர்களுக்கு பதிலளித்தேன். உண்மையிலேயே கட்சியின் செயலாளர் உள்ளிட்டோர் வெட்கப்பட வேண்டும். என்னைப் பற்றி தீர்மானம் எடுக்கும்போது எனக்குத் தெரியாது ஊடகங்களுக்கு கூறுகின்றீர்கள். ஆனால், இந்த விடயம் கட்சியின் செயற்குழுவை சேர்ந்த சிலருக்கும் தெரியாது.

எவ்வாறாயினும் என்னைக் கட்சியிலிருந்து நீக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுபிள்ளைகள் போன்று நடந்துகொள்கின்றனர். இந்தக் கட்சி எனது கணவரின் கட்சி. பெரும் மழையில் சிக்கியிருந்தவர்களுக்கு ஒதுங்க எனது வீட்டில் இடமளித்திருந்தேன். ஆனால், நான் வீட்டில் இருந்து வெளியே சென்றிருந்தபோது வீட்டின் திறப்பை மாற்றி, அவர்களின் வீடு என்று அதனைக் கூறுகின்றனர்.

இதனுடன் தொடர்புடைய அனைவருக்கும் ஒன்றைக் கூற வேண்டும். வீட்டின் உரித்து என்னிடமே உள்ளது. உங்களின் கட்சிக்குள் வேண்டியளவுக்கு பிரச்னைகள் உள்ளன. துண்டுகளாக பிரிந்துள்ளீர்கள். உங்களின் தலைவரிடம் வேலைத்திட்டங்கள் இல்லை எனக் கட்சியினர் கூறுகின்றனர். அங்கு பல்வேறு அணிகளாகப் பிரிந்து செயற்படுகின்றனர்.

நானும், கணவரும் இந்தக் கட்சியை கொடுத்த காரணத்தினாலேயே இவர்கள் இங்கே வந்துள்ளனர். இல்லாவிட்டால் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களில் அரைவாசிப் பேருக்கு ரணில் விக்கிரமசிங்க வேட்புமனுவை வழங்கியிருக்கமாட்டார். இவர்களில் பலர் இங்கு இருக்கமாட்டார்கள்" - என்றார். (இ)

## வவுனியாவில் கொரோனாவால் வயோதிபர் ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, ஒக். 11

வவுனியாவில் மேலும் 32 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன், வயோதிபர் ஒருவர் மரணமடைந்தார் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோர் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

அதில் வவுனியா மாவட்டத்தின் நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளையும் உள்ளடக்கியதாக 32 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக சாந்த சோலை பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவர் மரணமடைந்தார்.

இவர் கொரோனாத் தடுப்புக்கான எந்தவித தடுப் பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர் எனவும், மரணித்த வரின் சடலத்தை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## புத்தர் சிலையுடன் மூவர் கைது!

அநுராதபுரம், ஒக். 11

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரவாவிக்கு அருகில், புதையல் தோண்டியதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் புத்தர் சிலையொன்றை 60 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற மூவரை விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

மிஹிந்தலை, கஹட்டகஸ்திகலிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 40, 43, 45 வயதுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சுமார் 22 கிலோகிராம் புத்தர் சிலை கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் அநுராதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் விசாரணைகளின் பின்னர் அநுராதபுரம் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்-
சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர் இந்து குருமார் அமைப்பு



7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்:
டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-
ராஜபாட்டை,காஞ்சனா-03 ஆகிய
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் டைம்
06.30 மணி : நலந்தானா



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம்
(திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை)
மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
மறு ஒளிபரப்பு

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு